தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

விலை ரூ.15– மலர் 21– இதழ் 07– நவம்பர் 2019

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 150 கோடி வங்கிக் கடன்கள்...

திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர் (பொ)
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

நவம்பர் 2019

அன்பு சகோதரிகளே,

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றத்தின் வாயிலாக மாதந்தோறும் உங்களை சந்தித்து, எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் தருணம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியான தருணமாகும்.

சுய உதவிக் குழு இயக்கம், இன்று மாபெரும் இயக்கமாக உருவெடுத்துள்ளது. இதற்கு முழு காரணமும் நீங்கள்தான். உங்களின் அயராத உழைப்பும், தளராத செயல்பாடுகளும் தான் இந்த அளவிற்கு உயர காரணமாக இருக்கிறது. ஆண்களுக்கு நிகராக பெண்களும் அனைத்துத் துறைகளிலும் தங்களின் முத்திரையைப் பதித்து வருவது அனைவரும் அறிந்ததே. அதுபோல சுய உதவிக் குழு என்பது பெண்களுக்கானது மட்டும் என்ற நிலையிலிருந்து இப்போது ஆண்களும் சுய உதவிக் குழுக்களில் இணைந்து, தங்களின் பங்களிப்பைச் செலுத்தி வருவது பாராட்டுகளுக்குரியதாகும்.

நம் தமிழக அரசானது பெண்களின் நல்வாழ்விற்காகவும், அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதிலும் குறிப்பாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் ஓர் அங்கமாக விளங்கும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது மகளிருக்காக அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களை தமிழகத்தின் கடைக்கோடி பகுதியிலும் உள்ள அனைத்து மகளிருக்கும் கொண்டு செல்வதில் பெரும் பங்காற்றி அயராது செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு சுய உதவிக் குழுவினருக்கு பல்வேறு தொழில் பயிற்சிகள் வழங்குதல், கடன் உதவி பெற வழிவகை ஏற்படுத்துதல், சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல், வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், பல்வேறு நிர்வாகப் பயிற்சிகள் வழங்குதல், சுற்றுப்புற சுகாதார நடவடிக்கைகளில் சுய உதவிக் குழுவினரை ஈடுபடுத்தி ஊக்கப்படுத்துதல், தொழில் முனைவோராக உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளை நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஆகியவற்றின் வாயிலாக அரசு செயல்படுத்தி வருகிறது.

சுய உதவிக் குழுவினர் மட்டுமல்லாது பிறரும் இத்திட்டங்களின் பலனைப் பெற வேண்டும் என்ற உயரிய நோக்குடன், விற்பனைக் கண்காட்சிகள் வாயிலாக சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் தரமான பொருட்களை அனைத்துத் தரப்பினருக்கும் நேரடியாகவும், குறைந்த விலையிலும் கிடைக்கச் செய்தல், பணிபுரியும் மகளிருக்கு இரண்டு சக்கர வாகனம் வாங்க மானியம் வழங்குதல், சிறு, குறு தொழில்கள் துவங்க வங்கிக் கடன் வசதி பெற்றுத் தருதல், மன நலத்தை பாதுகாத்தல் உள்ளிட்ட அனைவருக்கும் பலனளிக்கும் பல்வேறு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. உங்களின் முன்னேற்றத்திற்காக மகளிர் திட்டம் வாயிலாக அரசு செயல்படுத்தும் திட்டங்களை சுய உதவிக் குழு மகளிர் அனைவரும் பயன்படுத்தி தங்கள் வாழ்வில் வளம் பெற வேண்டும்.

தற்போது பனிக்காலம் துவங்கப் போகிறது. இந்த காலக்கட்டத்தில் சாதாரண சளி, காய்ச்சல் முதல் அடையாளம் காணப்படாத ஜுரம், தொற்றுநோய்கள் வரை நம்மை தாக்கக்கூடும். நோய்க்கிருமிகள் பரவ, மிகவும் சாதகமாக இருக்கும் குளிர்ச்சியான மற்றும் ஈரப்பதமான சூழ்நிலைதான் இதற்கு முக்கிய காரணம். ஆங்காங்கே நீர் தேங்குவதால், கொசு மற்றும் ஈக்கள் மூலமாக எளிதில் நோய் பரவும் வாய்ப்புகளும் அதிகரித்து விடுகின்றன. இதைத் தவிர்க்க சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருப்பது அவசியம். வீட்டிலும் வீட்டைச் சுற்றியும் தண்ணீர் தேங்கவிடாமல் பார்த்துக் கொள்வதோடு, வீட்டைச் சுற்றி அவ்வப்போது பிளீச்சிங் பவுடர் தூவி சுத்தமாக வைத்திருப்பதே சிறந்தது.

குப்பைகளை குப்பைத் தொட்டிகளிலேயே போட வேண்டும். பிளாஸ்டிக் பைகள், தேங்காய் ஓடுகள், டயர்கள் போன்றவற்றை வீட்டிலும், வீட்டுக்கு அருகிலும் இருந்து முற்றிலும் அகற்ற வேண்டும். பள்ளி செல்லும் மாணவ மாணவியர் தங்கள் வீட்டில் கொதிக்க வைத்த தண்ணீரையே எப்போதும் குடிக்க வேண்டும். இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால், கைவைத்தியமோ, மருந்தகங்களில் மாத்திரை வாங்கி சாப்பிடுவதோ கூடாது. உடனடியாக அருகில் உள்ள பொது மருத்துவரை அணுக வேண்டும். இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நமக்கு நோய்கள் ஏற்படாமல் நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள முடியும். அரசும் மழைக்கால நோய்களைத் தடுக்க பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் எடுத்து வருகிறது. அரசுடன் நாமும் இணைந்து செயல்பட வேண்டும். இதனை குழுவில் உள்ள அனைவருக்கும் தெரியப்படுத்தி சுகாதாரமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

ச.ப. கார்த்திகா

மேலாண்மை இயக்குநர் (பொ)

குறளும்-பொருளும்

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை

தளராத ஊக்கம் உள்ளவரிடம் செல்வமானது தானே
அவர் முகவரியை அறிந்து செல்லும்.

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல்
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

protncdw1@gmail.com

உள்ளே...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் விழாப் பேருரை 05

மாவட்ட செய்திகள் 08

சிறகுகள் சுய உதவிக் குழுவின் வெற்றி 09

நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தால் வாழ்வாதாரம் பெற்ற திருநங்கையர் 10

வங்கியாளர்களுக்கான கருத்தரங்கு மற்றும் புத்தாக்கப் பயிற்சி 12

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 20

முற்றக் கச்சேரி 24

வெற்றிக் கதைகள் 26

மகளிரின் பொருளாதார வளர்ச்சியில் அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்கும் திட்டம் 30

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) தேசிய வள மையம் (NRO) 33

➜ முற்றம் வாசகர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

அச்சு மற்றும் வெளியீட்டு செலவினங்கள் அதிகரித்துள்ள காரணத்தினாலும், தற்போது மாறிவரும் சூழலுக்கேற்ப முற்றம் இதழை புதிய தொழில்நுட்ப வடிவில் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ள காரணத்தினாலும் சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாக விளங்கி வரும் நமது முற்றம் இதழின் விற்பனை விலை மற்றும் ஆண்டு சந்தா கட்டணங்கள் வருகிற 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்பட உள்ளது என்பதை அனைத்து முற்றம் வாசகர்களுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றம் இதழின் தனிப்பிரதி / சந்தா விபரம்	தற்போதைய விலை	ஜனவரி 2020 முதல் மாற்றம் செய்யப்படவுள்ள புதிய விலை	ஜனவரி 2020 முதல் முற்றம் வாசகர்களுக்கான சலுகை விலை
முற்றம் இதழின் தனிப்பிரதி	ரூ. 15	ரூ. 20	ரூ. 20
ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180	ரூ. 240	ரூ. 200 (தள்ளுபடி ரூ. 40)
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360	ரூ. 480	ரூ. 400 (தள்ளுபடி ரூ. 80)
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540	ரூ. 720	ரூ. 600 (தள்ளுபடி ரூ. 120)

முற்றம் இதழின் வாசகர்கள் அளித்து வரும் தங்களின் ஆதரவினை இவ்விதழுக்குத் தொடர்ந்து வழங்கி உற்ற தோழியாய், உறுதுணையாய் என்றும் இருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– முற்றம் இதழ்

தமிழ்நாடு
மகளிர்
மேம்பாட்டு
முற்றம்

மலர் 21
இதழ் 07
நவம்பர் 2019
விலை ரூ.15

- **கௌரவ ஆசிரியர்கள்**

திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர் (பொ),
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்**

எஸ். சின்னப்பன், செயலர், முற்றம்

- **ஆசிரியர் குழு**

கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

பா. செல்வராஜன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜி. சரஸ்வதி கணேசன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சி. கே. வீரணன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

- **நிர்வாக ஆசிரியர்**

ச. சந்தோஷினி சந்திரா, பொது மேலாளர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **நிதி நிர்வாகம்**

அ. நிருபா ராணி, நிதி ஆலோசகர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்**

கூ. பாபு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **துணை ஆசிரியர்: ஏ. கண்ணன்**
- **முதுநிலை கணக்காளர்: சு. சசிகலா**
- **பிழை திருத்துபவர்: எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
- **கணினி வடிவமைப்பு: டி. ராஜரத்தினம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை 600 034.

தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

கவனத்தில் கொள்வோம்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

சுய உதவிக் குழு இயக்கத்தைச் சேர்ந்த அனைவரும் தங்களின் பொருளாதார வளர்ச்சியில் மட்டும் கவனம் செலுத்தாமல் சமுதாய வளர்ச்சியிலும் தங்களின் கவனத்தை செலுத்தி வருவது அனைவராலும் பாராட்டுக்குரியதாகும். கிராம சபைக் கூட்டங்களில் பங்கு கொண்டு தங்களின் வாழ்விடங்களுக்குத் தேவையான பல்வேறு அத்தியாவசியத் தேவைகளை பெற்று வருவது, சுற்றுப்புறச் சுகாதாரம், உடல்நலம், பெண் கல்வி, பிளாஸ்டிக் ஒழிப்பு, மழைநீர் சேகரிப்பு போன்றவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது என பல்வேறு சமூக நல நடவடிக்கைகளில் சுய உதவிக் குழுவினர் ஈடுபட்டால் நாமும், நமது சுற்றுப்புறமும் மேன்மையடையும்.

குறிப்பாக இன்று அடையாளம் காணப்படாத பல்வேறு நோய்களின் தாக்குதலுக்கு மக்கள் ஆளாகி வருகின்றனர். குளிர்கால பருவத்தில் இது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது. எனவே வருமுன் காக்கும் வகையில் சுய உதவிக் குழு மகளிர் தங்களின் உடல் நலத்தையும், சுற்றுப்புறச் சூழலையும் கவனமுடன் பராமரித்துக் கொள்ள வேண்டும்.

இந்த காலக்கட்டத்தில் நம் உடல் நலத்தைப் பேணிக் காக்க சத்தான உணவுகள், சுத்தமான ஆடைகள், கொதிக்க வைத்த குடிதண்ணீர், தேவையான மருத்துவ சிகிச்சைகள் உள்ளிட்டவற்றை தவறாமல் கடைபிடிக்க வேண்டும். எனவே அவற்றை தவறாமல் கடைபிடிக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நம் உடல் நலத்தைக் காப்பது போல் சுற்றுப்புறத்தையும் காக்க வேண்டும். கழிவு நீர் தேங்காமல் தடுப்பது, குப்பைகளை உரிய முறையில் அகற்றுவது, கொசு, புழு, பூச்சிகள் போன்ற நோய் பரப்பும் உயிரினங்கள் உருவாகாமல் ஆரம்பத்திலேயே அதனைத் தடுக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போன்றவற்றை கடைபிடிக்க வேண்டும்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை கவனத்தில் கொண்டு, நாமும் நமது சுற்றுப்புறத்தைப் பேணி பாதுகாக்க வேண்டும். சுய உதவிக் குழு மகளிர் அனைவருக்கும் முன்னுதாரணமாக இருப்பவர்கள் என்பதற்கு ஏற்ப செயல்பட முற்றம் சார்பாக உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

எஸ். சின்னப்பன்
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் ரூ. 550.50 கோடி மதிப்பிலான திட்டப் பணிகள் திறப்பு விழா, ரூ. 112.62 கோடி மதிப்பிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா மற்றும் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கீழ் 525 நபர்களுக்கு பணி நியமன ஆணை, ஊரக வளர்ச்சித் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் (ம) கழிவுநீரகற்று வாரியத்தில் 279 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 150 கோடி வங்கிக் கடன் உதவி ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 31.10.2019 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 31.10.2019 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைகளின் சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆற்றிய உரை விபரங்கள் பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளது:

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

'தமிழ்நாடு விரைவான வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வரும் மாநிலம்' என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும் தொடர்ந்து தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் வழி நடத்திச் செல்கிறது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தற்போது 15 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகள் உள்ளன. தேசிய அளவில் 31 சதவிகித மக்கள் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 48.45 சதவிகிதம் நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களைக் கொண்டு, நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

கிராமங்களே நாட்டின் முதுகெலும்பு என்றார் மகாத்மா காந்தியடிகள். தமிழ்நாட்டில் உள்ள 31 ஊரக மாவட்டங்களில் 79 ஆயிரத்து 394 குக்கிராமங்கள் உள்ளடக்கிய 12 ஆயிரத்து 524 ஊராட்சிகள் உள்ளன.

ஊரகப் பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்குவது, சமுதாயத்திற்கு தேவையான சேவைகளை அளிப்பது, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் தனிநபர் குடும்பங்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவது, நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல், நகரங்களுக்கு இணையான கட்டமைப்புகளை கிராமங்களிலும்

உருவாக்குதல் போன்ற எண்ணற்ற ஊரக வளர்ச்சித் திட்டங்களை தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தி வருகிறது.

> தமிழ்நாட்டில் பெரும் வெற்றியடைந்த திட்டங்களில் முக்கியமான திட்டம் மகளிர் சுய உதவி குழுத் திட்டமாகும்.

`ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம்' என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். கிராமப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு செயல்பாட்டையும் தாண்டி, தொழில் மேம்பாடு, நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் ஊரக சமுதாயத்தின் வளம் மற்றும் நிலைத்த உயர்வினை உருவாக்கி பெரும் மாற்றம் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உலக வங்கியின் நிதி உதவியுடன் `தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம்` என்ற ஒரு தனித்துவம் வாய்ந்த திட்டம் 918 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டமானது, 26 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில், 3,994 ஊராட்சிகளில் இரண்டு கட்டங்களாக 6 வருடங்களில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம், ஆதிதிராவிடர், பழங்குடியினர், இளைஞர்கள், பெண்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள், வேளாண் சார்ந்த மற்றும் வேளாண்சாரா துறைகளைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் இணைந்த குழு, கூட்டமைப்புகள் ஆகியோர் மிகுந்த பயன் அடைவார்கள். இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு 172 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் இத்திட்டத்தில் பணியாற்றுவதற்காக மாவட்ட செயல் அலுவலர்கள், இளம் வல்லுநர்கள், செயல் அலுவலர்கள், வட்டார அணித் தலைவர்கள் மற்றும் திட்ட அலுவலர்கள் என 525 நபர்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான பணி நியமன ஆணைகள் வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் 1930ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட காலத்திலிருந்து, சரித்திரத்தில், ஒரே ஆண்டில் கிட்டத்தட்ட 17,600 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கி சரித்திரம் படைத்த அரசு அம்மாவின் அரசு. அதேபோல, இன்றைக்கு பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்பை இளைஞர்களுக்கு வழங்க வேண்டுமென்ற அடிப்படையிலே ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குகின்ற அரசும் அம்மாவினுடைய அரசு என்பதை கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

மரத்தில் படரும் கொடியே, உன்னை
வளர்த்தவரா இங்கு படரவிட்டார்!
மண்ணில் நடக்கும் நதியே, உன்னை
படைத்தவரா இந்த பாதை சொன்னார்!
உங்கள் வழியே, உங்கள் உலகு, இந்த
வழிதான் எந்தன் கனவு!

என்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாடலுக்கு ஏற்ப, பெண்கள் யார் தயவும் இன்றி தங்கள் சொந்தக் காலில் நிற்பதற்காக, பெண்களின் நல்வாழ்வுக்காக மாண்புமிகு அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்ட திட்டம்தான் `மகளிர் சுய உதவிக் குழுக்கள்' ஆகும். தமிழ்நாட்டில் பெரும் வெற்றியடைந்த திட்டங்களில் முக்கியமான திட்டம் மகளிர் சுய உதவி குழுத் திட்டமாகும்.

சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்புத் திட்டம் 1992ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுய உதவிக் குழு வங்கிக் கடன் இணைப்புத் திட்டத்தின் மூலம் முறையான வங்கி மற்றும் நிதி சேவைகள் ஏழை மக்களை சென்றடைவதால், எண்ணற்ற குடும்பங்கள் வருமானம் ஈட்டக்கூடிய பல்வேறு தொழில்களை தொடங்கி நடத்திடவும், வீட்டின் வருமானத்தை உயர்த்தி, கடன் சுமையிலிருந்து மீளவும், குடும்ப சூழ்நிலையை நல்ல முறையில் அமைத்துக் கொள்ளவும் மற்றும் வறுமை சுழற்சி யிலிருந்து விடுபடவும், பெண்கள் சொந்தக் காலில் நிற்பதற்கும் உதவிகரமாக உள்ளது.

புதியதாக சுமார் 1 லட்சத்து 20 ஆயிரம் குழுக்கள் உருவாக்கப்பட்டது மட்டுமின்றி, இந்தத் திட்டத்தின் மூலம் கடந்த 2011ஆம் ஆண்டு முதல், இதுவரை 20 லட்சத்து 64 ஆயிரத்து 678 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுமார் 57 ஆயிரத்து 876 கோடியே 71 லட்சம் ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டு பல்வேறு தொழில்கள் இன்றைக்கு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது இலக்காக குறிக்கப்பட்ட 50 ஆயிரம் கோடி

> **கடந்த 2011ஆம் ஆண்டு முதல், இதுவரை 20 லட்சத்து 64 ஆயிரத்து 678 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுமார் 57 ஆயிரத்து 876 கோடியே 71 லட்சம் ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டு பல்வேறு தொழில்கள் இன்றைக்கு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

ரூபாயை விட கூடுதலாகும். குறிப்பாக 2018–19ஆம் ஆண்டில் 2 லட்சத்து 95 ஆயிரத்து 612 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 11 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக்கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, மிகுதியாக 11,449 கோடி ரூபாய் வழங்கி மாண்புமிகு அம்மாவின் அரசு சாதனை படைத்துள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2019–2020 நிதியாண்டில் 12,500 கோடி ரூபாய் வங்கிக் கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 5 ஆயிரத்து 247 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் இந்த இனிய விழாவில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 150 கோடி ரூபாய் அளவில் கடன் வழங்கப்படவுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நீங்கள் அனைவரும் மக்களிடம் நேரிடையாக அரசின் நலத்திட்டங்களை கொண்டு சேர்க்கும் உன்னதமான பணியினை செய்வதற்கான பணி நியமன ஆணைகள் பெற்றுள்ளீர்கள். நீங்கள் ஏற்றுக் கொண்ட இப்பணிக்கு, நேர்மையாகவும் சேவை மனப்பான்மையுடன் பணியாற்றி, வாழ்வில் உயர்நிலையை அடையவும், அதே நேரத்தில் அரசுக்கு நற்பெயரை பெற்றுத் தர வேண்டும் என்றும் அன்புடன் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

> **மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 150 கோடி ரூபாய் அளவில் கடன் வழங்கப்பட்டுள்ளது.**

இன்றைக்கு உள்ளாட்சி அமைப்பு என்பது மக்களின் அடிப்படைத் தேவைகளை முழுவதும் நிறைவேற்றக் கூடியதும், மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதுமான மிகப் பெரிய அமைப்பாகும். ஒரு மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்பு சிறந்து விளங்கினால் மக்களிடத்தில் நன்மதிப்பு கூடும். அந்த வகையில், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருந்த காலத்திலிருந்தே இந்தத் துறை சிறந்து விளங்க வேண்டுமென்பதற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்து இந்தத் துறையில் பல்வேறு திட்டங்களை வகுத்தளித்து இன்றைக்கு கிராமங்களிலிருந்து நகரம் வரை மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் முழுவதும் நிறைவேற்றப்படக்கூடிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசு மக்களுடைய அரசு, மக்களுக்குத் தேவையான திட்டங்களை அளிக்கின்ற அரசு. ஆகவே, உள்ளாட்சித் துறையின் மூலமாக மக்களுக்கு நிறைய பணிகள், மக்கள் மனம் நிறைய, பணிகள் நிறைவேற்றப்படும் என்ற செய்தியைச் சொல்லி, இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்த துறையின் செயலாளர் அவர்களுக்கும், தலைமைச் செயலாளர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

கோயம்புத்தூர் மாவட்டம்

கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி, காந்தி பார்க்கில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு மற்றும் அம்மா இரு சக்கர வாகனம் மானியம் வழங்கும் விழா நடைபெற்றது. மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு 6 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனாக ரூ. 30 இலட்சம் மற்றும் அம்மா இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ் 4 பயனாளிகளுக்கு ரூ. ஒரு லட்சம் மானியமும் வழங்கினார். இவ்விழாவில் கோவை மாவட்ட ஆட்சியர், கோவை மாநகராட்சி ஆணையர், கோவை மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், பல்வேறு துறை அரசு அலுவலர்கள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்கும் விழா

கோயம்புத்தூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதி, அசோகபுரத்தில் நடைபெற்ற வங்கிக் கடன் இணைப்பு மற்றும் அம்மா இரு சக்கர வாகனம் மானியம் வழங்கும் விழாவில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். இவ்விழாவில் 26 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனாக ரூ. ஒரு கோடி மற்றும் அம்மா இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ் 100 பயனாளிகளுக்கு ரூ. 25 லட்சம் மானியமும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் வழங்கினார். இவ்விழாவில் கவுண்டம்பாளையம், மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் மேற்கு சட்டமன்ற உறுப்பினர்கள், கோவை மாவட்ட ஆட்சியர், கோவை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர், கோவை மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், பல்வேறு துறை அரசு அலுவலர்கள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சிறகுகள் சுய உதவிக் குழுவின் வெற்றி

நகர்ப்புறங்களில் ஏழ்மையை போக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வரும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் செயல்பாடுகளிலும் ஈடுபட்டு வருகிறது. மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றில் உறுப்பினர்களாக உள்ள மாற்றுத் திறனாளர்களின் திறன்களை ஊக்குவித்து, அவர்களை சுய தொழில் மேற்கொள்ளச் செய்து, தொழில் முனைவோராகவும் முன்னேற்றம் கொள்ளச் செய்யும் மகத்தான பணியினை நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மேற்கொண்டு வருகிறது.

சென்னை, மைலாப்பூரில் செயல்பட்டு வரும் சிறகுகள் சுய உதவிக் குழுவில் மாற்றுத் திறனாளிகளும் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுவானது பல்வேறு பொருட்களில் அழகிய கலை நயமிக்க பொருட்களை உருவாக்கி, விற்பனை செய்து வருகின்றது.

‘உடலில் மட்டுமே ஊனம், தங்களின் உழைப்பில் இல்லை’ என்ற வார்த்தைக்கு ஏற்ப செயல்பட்டு வரும் சிறகுகள் சுய உதவிக் குழுவில் உள்ள மாற்றுத் திறனாளி உறுப்பினர்கள் தங்களின் உழைப்பாலும், கைத் திறத்தாலும் அனைவரையும் கவர்ந்து வருகின்றனர்

இவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் நடைபெறும் கண்காட்சிகள், கல்லூரிச் சந்தைகள் போன்றவற்றில் கடைகள் வழங்கப்பட்டு, அவற்றில் இவர்கள் தயாரிக்கும் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மாற்றுத் திறன் உள்ளவர்களாக இருந்தாலும் தங்களாலும் அழகிய பொருட்களை உருவாக்க முடியும் என்பதை நிரூபித்து வரும் இக்குழுவினரின் தயாரிப்புப் பொருட்கள் கலைநயம் மிக்கவையாகவும் தரமானதாகவும் உள்ளதால்அனைவரும் விரும்பி வாங்குகின்றன.

‘உடலில் மட்டுமே ஊனம், தங்களின் உழைப்பில் இல்லை’ என்ற வார்த்தைக்கு ஏற்ப செயல்பட்டு வரும் சிறகுகள் சுய உதவிக் குழுவில் உள்ள மாற்றுத் திறனாளி உறுப்பினர்கள் தங்களின் உழைப்பாலும், கைத் திறத்தாலும் அனைவரையும் கவர்ந்து வருகின்றனர் என்பது சிறப்பிற்குரியது.

நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தால்

வாழ்வாதாரம் பெற்ற திருநங்கையர்

சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழ்பவர்கள் திருநங்கைகள். சமீபகாலமாக திருநங்கைகள் பலரும் தங்களின் ஆளுமையைச் சமூகத்தில் தைரியமாக வெளிப்படுத்தி, அவர்களின் இருப்பை அழுத்தமாகப் பதிவு செய்து வருகின்றனர்.

தமிழகத்தில் புதிய முயற்சியாக, நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் திருநங்கையரும் முன்னேற்றம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர்களை இணைத்து சுய உதவிக் குழுக்கள் அமைத்து, தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன.

நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் நகர்ப்புற வீடற்றோர் காப்பகத்தில் உள்ள திலோத்தமா மற்றும் ஜெகதீஸ்வரி ஆகிய இரண்டு திருநங்கையர் சுய தொழில் மேற்கொண்டு தங்களின் பொருளாதார நிலையினை உயர்த்தி வருகின்றனர்.

இவ்விரு திருநங்கையரும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வழங்கப்படும் செயற்கை ஆபரணத் தயாரிப்பு, அலங்காரத் தோரணம் பின்னுதல், கண்ணாடி ஓவியம் மற்றும் கைவீவினைப் பொருட்கள் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் நடைபெறும் கண்காட்சிகள், கல்லூரிச் சந்தைகள் போன்றவற்றில் தங்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்து வருவாய் ஈட்டி வருகின்றனர். இவர்கள் தயாரிக்கும் பொருட்கள் தரமாக இருப்பதால் அனைவராலும் விரும்பி வாங்கப்படுகிறது.

விளிம்பு நிலையில் வாழ்ந்து வந்த தங்களுக்கு, தொழில் பயிற்சிகள் கொடுத்து தொழில் முனைவோராக மாற்றி, தங்களுக்கு சமூகத்தில் அங்கீகாரம் பெற்றுத் தந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கும் தங்களின் நன்றியினை திலோத்தமா மற்றும் ஜெகதீஸ்வரி ஆகியோர் தெரிவித்துக் கொள்கின்றனர்.

சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்யும் சன்டே மகளிர் சந்தை

நீலகிரி மாவட்டம்

நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களின் வழிகாட்டுதலில் 3000-க்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்கள் துவங்கப்பட்டு, அவைகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. வங்கிகளில் கணக்கு தொடங்கி, ஆறு மாதங்கள் கணக்கு பராமரிக்கப்படும் குழுக்களை தேர்வு செய்து, தர மதிப்பீடு அடிப்படையில், அவைகளுக்கு வங்கிகள் சார்பில் கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக தங்களின் பாரம்பரிய தொழில்களை மேற்கொண்டு மண் பாண்டங்கள், சிலைகள், தோடர் இன மக்களின் பாரம்பரிய பூ வேலைப்பாடுடன் கூடிய துணிகள், இருளர், குறும்பர் பழங்குடியின மக்களின் பாரம்பரிய உணவுகள், கைகளால் உற்பத்தி செய்யப்படும் சோப்புகள் ஆகியவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகிறார்கள்.

இவர்கள் தயாரிக்கும் பொருட்கள் உதகை மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் செயல்படும் பூமாலை வளாகத்தில் விற்பனை செய்யப்பட்டு வந்தது. மேலும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த விற்பனை வாய்ப்பு அதிகமுள்ள இடங்களைத் தேர்வு செய்து 'மதி அங்காடி' என்ற பெயரில் விற்பனை அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன.

இன்றைய நாகரீக உலகத்திற்கு ஏற்றவாறு சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கின்ற பொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்ய ஏதுவாக 'சன்டே மகளிர் சந்தை' தொடங்கப்பட்டுள்ளது.

உதகை பூமாலை வணிக வளாகத்தில் வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் 'சன்டே மகளிர் சந்தை'யினை 03.11.2019 அன்று நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி. ஜே. இன்னொசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து, அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சுய உதவிக் குழுவினர் தயாரித்த பொருட்களைப் பார்வையிட்டார்.

`சண்டே மகளிர் சந்தை' குறித்து நீலகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், திரு. பி. பாபு அவர்கள் கூறும் போது, `தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் துவக்கப்பட்டுள்ள இந்த சந்தை ஒவ்வொரு ஞாயிறுதோறும் நடத்தப்படும். முதற்கட்டமாக உதகை பூமாலை வளாகத்தில் இந்த சந்தை தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு கிடைக்கும் வரவேற்பை பொறுத்து, பிற வட்டங்களில் மகளிர் சந்தை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.' என்று குறிப்பிட்டார்.

இயற்கை முறையில் விளைவிக்கப்படும் பொருட்களை விற்பனை செய்யும் நம் சந்தை

வேலூர் மாவட்டம்

வேலூர் மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்புகள் மற்றும் விவசாயிகள் மூலமாக இயற்கை முறையில் விளைவிக்கப்படுகின்ற பொருட்களை ஒருங்கிணைத்து விற்பனை செய்வதற்கு ஏதுவாக `நம் சந்தை' என்னும் வாராந்திர சந்தை தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் செயல்படும் நம் சந்தையினை வேலூரில் உள்ள பூமாலை வணிக வளாகத்தில் அமைந்துள்ள ஏலகிரி அரங்கில் வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. அ. சண்முகசுந்தரம், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். பின்னர் சந்தையில் உள்ள அனைத்துக் கடைகளையும் பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள் நம் சந்தையில் விற்பனை செய்யப்படும் இயற்கை விளைபொருட்களான காய்கறிகள், பழங்கள், கீரைகள், சிறுதானியங்கள், நாட்டுக்கோழி முட்டைகள், நாட்டு மாடுகளின் பால் மற்றும் தேன் போன்றவற்றை பொதுமக்கள் அதிக அளவில் வாங்கி பயன் பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன் அவர்கள், இயற்கை ஆர்வலர் திரு. செந்தமிழ்ச்செல்வன், மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வங்கியாளர்களுக்கான
கருத்தரங்கு மற்றும் புத்தாக்கப் பயிற்சி

மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றிற்கு வங்கிக் கடன் இணைப்புகள் பெற்றுத் தரப்படுகின்றன. வங்கிகளுக்கும் சுய உதவிக் குழுக்களுக்கும் இடையிலான தொடர்புகளை மேலும் வலுப்படுத்தவும், அதிக அளவில் வங்கிக் கடன் வழங்குவதற்கான வழிமுறைகள் குறித்து பல்வேறு கருத்துக்களை பகிர்ந்து கொள்ள தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் வங்கியாளர்களுக்கான கருத்தரங்குகள் மற்றும் புத்தாக்கப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

◆ கன்னியாகுமரி மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்ட தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்கள் சங்கக் கட்டிடத்தில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் மு. வடநேரே, இ.ஆ.ப, அவர்கள் வங்கியாளர்களுக்கான கருத்தரங்கை துவக்கி வைத்து, சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வங்கிக் கடன் இணைப்பு வழங்குவது குறித்து பேசினார். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் முதன்மை செயல் அலுவலர் திரு. பா. செல்வராஜன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், கன்னியாகுமரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வே. பிச்சை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் திரு. எல். பிரபாகர், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. பி. ராம்குமார், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வங்கிகளின் மேலாளர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

◆ திருவண்ணாமலை மாவட்டம்

திருவண்ணாமலை அடையார் ஆனந்தபவன் கூட்ட அரங்கில் 25.10.2019 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்ற வங்கியாளர்களுக்கான கருத்தரங்கில் TNSRLM செயல்படும் பகுதியில் உள்ள சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கடன் திருப்பம் செய்யும் குழு (CBRM) வின் செயல்பாடுகள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் கடன் இணைப்பு, கணக்கு பராமரிப்பு மற்றும் தர மதிப்பீடு தொடர்பான விவரங்கள் கலந்தாலோசிக்கப்பட்டது.

சென்னை தலைமை அலுவலகத்திலிருந்து வருகை தந்திருந்த கூடுதல் இயக்குநர் (NULM) திருமதி. பாரிஜாதம் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், திருவண்ணாமலை மத்திய கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திருமதி. பெ. சந்திரா அவர்கள் மற்றும் அனைத்து உதவி திட்ட அலுவலர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர்,AGM Nabard, அனைத்து வங்கி மேலாளர்கள், வங்கி ஒருங்கிணைப்பாளர்கள், கலந்து கொண்டனர்.

◆ திண்டுக்கல் மாவட்டம்

திண்டுக்கல் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் வங்கியாளர்களுக்கான ஒருநாள் புத்தாக்க பயிற்சி கூட்டம், திண்டுக்கல் பார்ஷன்ஸ் கோர்ட்டு ஹோட்டலில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. மு. விஜயலெட்சுமி, இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் திண்டுக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. ம. சந்தோஷ்குமார் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இக்கூட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட வங்கி கடன் இலக்கான ரூ. 375 கோடியை விரைந்து எய்திடுமாறு வங்கியாளர்களுக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுரை வழங்கியதுடன், 4 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 21 லட்சம் வங்கி கடன் உதவிகளையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அனைத்து வங்கி மேலாளர்கள், வங்கி ஒருங்கிணைப்பாளர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பிரிட்ஜ் பயன்படுத்தும் முறைகள்

பொதுவாக நாம் சமைக்க பயன்படும், சமைத்த பொருட்களை பிரிட்ஜில் வைத்து பல நாட்களுக்கு பாதுகாக்கிறோம். ஆனால், சில பொருட்களை பிரிட்ஜ் எனப்படும் குளிர்பதனப் பெட்டியில் வைக்கக் கூடாது. வைக்கக் கூடாது மட்டும் அல்ல, வைக்கவே கூடாது என்றும் சொல்லலாம். அது போன்ற பொருட்களின் பட்டியலை பார்க்கலாம்.

வெங்காயம்: வெங்காயம் பொதுவாக காற்றோட்டமான சூழ்நிலையில் இருக்க வேண்டும். பாலீதீன் பையில் அடைத்து விற்கப்படும் வெங்காயத்தை நாம் வாங்கி வீட்டுக்கு கொண்டு வந்த பிறகு அதனை காற்றோட்டமாக வைக்க வேண்டும்.

பூண்டு: பூண்டை எப்போதுமே பிரிட்ஜில் வைக்கக் கூடாது. அப்படி வைத்தால் அது பூசணம் பிடிக்க ஆரம்பித்து விடும். அதனை காற்றோட்டமான சூழலில் வைக்க வேண்டும். பூண்டுகளை வாங்கி வந்ததும், அதனை தனித்தனி பல்லாக பிரித்து எடுத்து வைக்கலாம்.

உருளைக் கிழங்கு: உருளைக் கிழங்குகளை பிரிட்ஜில் வைக்கக் கூடாது. அதுபோலவே அதனை கழுவியும் எடுத்து வைக்கக் கூடாது. உருளைக் கிழங்குகளில் பச்சை வேர்கள் மற்றும் பச்சை நிறம் இல்லாமல் பார்த்து வாங்க வேண்டும். காற்றோட்டமான சூழலில் வைக்க வேண்டும். பாலீதீன் பையில் வைக்கக் கூடாது.

தேன்: உலகத்திலேயே கெட்டுப் போகாத உணவு பொருள் என்று ஒன்று உண்டு என்றால் அது தேன்தான். ஆனால், இப்போது கடைகளில் விற்கப்படும் தேனில், சுவை மற்றும் பலவற்றுக்காக பலவித பொருட்கள் கலக்கப்பட்டு வருகிறது. எனினும், தேனை பிரிட்ஜில் வைத்து பராமரிக்கக் கூடாது.

வாழைப்பழம்: வாழைப் பழத்தை பிரிட்ஜில் வைத்தால் அது விரைவில் கெட்டுப் போய் தோல் கருத்து விடும். எனவே வாழைப் பழத்தை பிரிட்ஜில் வைக்கக் கூடாது.

பூசணிக்காய்: பூசணிக்காயை நன்கு காற்றோட்டமான இடத்தில் வைக்க வேண்டும். எனவே பிரிட்ஜில் வைக்கக் கூடாது.

முலாம்பழம்: கடையில் இருந்து முழுதாக வாங்கி வந்த முலாம்பழத்தை பிரிட்ஜில் வைக்கக் கூடாது. அவ்வாறு வைத்தால், முலாம் பழத்தில் இருக்கும் சில சத்துக்களை பழம் இழந்து விடும். ஆனால், நறுக்கிய முலாம்பழத்தை டப்பாவிலோ பாலிதீன் பையிலோ போட்டு பிரிட்ஜில் வைக்கலாம். இதேபோல, அன்னாசி, கிவி பழம், பிலம் பழம், மாங்காய் போன்றவற்றையும் பிரிட்ஜில் வைக்கக் கூடாது.

அவல் பணியாரம்

சுவையான உணவுகளை அனைவரும் விரும்பி உண்பார்கள். சுவையுடன் உடல் நலத்திற்கும் ஏற்ற உணவுகள் அனைவராலும் விரும்பப்படும். இந்த வகையில் சுவையான உடல் நலத்திற்கு ஏற்ற அனைத்து வயதினரும் உண்ணக்கூடிய அவல் பணியாரம் செய்யும் முறை குறித்து பார்ப்போம்.

தேவையான பொருள்கள்:

பச்சரிசி-1 கப், அவல்-1 கப், வெல்லம் (பொடித்தது)-1 கப், சோடா உப்பு-1/2 தேக்கரண்டி, நெய் மற்றும் எண்ணெய் தலா 50 கிராம்

செய்முறை :

பச்சரிசி மற்றும் அவலை நன்றாக கழுவி 3 மணி நேரம் தண்ணீரில் ஊற வைக்கவும். ஊறிய பின் தண்ணீரை வடித்து விட்டு பச்சரிசி மற்றும் அவலை மிக்சியில் சேர்த்து அரைக்கவும். பாதி அரைத்ததும் வெல்லம் மற்றும் சிறிது தண்ணீர் சேர்த்து நன்றாக அரைக்கவும். தேவையான அளவு தண்ணீர் சேர்த்து இட்லி மாவு பதத்திற்கு அரைத்துக் கொள்ளவும். அரைத்த மாவை ஒரு பாத்திரத்தில் ஊற்றி சோடா உப்பு சேர்த்து கலக்கி கொள்ளவும். இனிப்பு இன்னும் தேவையென்றால் 2 மேஜைக்கரண்டி சர்க்கரை சேர்த்துக் கொள்ளவும். நெய் மற்றும் எண்ணெய் இரண்டையும் சேர்த்து கலந்து வைக்கவும்.

அடுப்பில் பணியார கடாயை வைத்து கலந்து வைத்திருக்கும் நெய் மற்றும் எண்ணெயை ஒரு மேஜைக்கரண்டி எடுத்து ஒவ்வொரு குழிக்கும் ஊற்றவும். எண்ணை நன்றாக சூடானதும் மாவை எடுத்து அனைத்து குழிகளிலும் ஊற்றி மிதமான சூட்டில் வைத்து வேகவிடவும். சிறிது நேரம் கழித்து ஒரு சிறிய கம்பி அல்லது ஸ்பூனால் மாற்றி போடவும். இரண்டு பக்கமும் பொன்னிறமானதும் எடுத்து விடவும். மீதமுள்ள மாவையும் இதே முறையில் சுட்டு எடுக்கவும். சுவையான அவல் பணியாரம் ரெடி. சுவையும், சத்தும் நிறைந்த அவல் பணியாரத்தை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள்.

கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு விருதுகள்

◆ **தூத்துக்குடி மாவட்டம்**

தூத்துக்குடி மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் 31.10.2019 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்ட தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. ம. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் (NULM) சாலையோர வியாபாரிகளுக்கு யூகோ வங்கி சார்பாக 3 நபர்களுக்கு ரூ. 95,000/- வங்கிக் கடனுதவிகளை வழங்கினார்.

மேலும் 2013 முதல் 2016 வரையிலான ஆண்டுகளுக்கு சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளாக தேர்வு செய்யப்பட்ட மேல ஆத்தூர், ஈராச்சி, குலசேகரபட்டினம், வசவப்பபுரம் ஆகிய நான்கு கூட்டமைப்புகள் மற்றும் மாவட்ட அளவில் சிறந்த மகளிர் சுய உதவி குழுக்களாக தேர்வு செய்யப்பட்ட வெண்புறா, ஸ்கேடு பாசமலர், எம்பவர், புஷ்பம், மல்லிகை, சுயம்சித்தா ரோஜா, ஸ்ரீ காளிகாம்பாள், ஜெயமுத்துமாலை, ஸ்ரீ விநாயகா, ஜாஸ்மின், சுடர் கிராம உதயா, ரோஜா ஆகிய 12 குழுக்களுக்குள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் விருதுகளையும், ரூ. 7,00,000/-த்திற்கான காசோலைகளையும் வழங்கினார்.

இவ்விழாவில் தூத்துக்குடி மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி, பல்வேறு துறை அரசு அலுவலர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் இயற்கை நேய பட்டாசு விற்பனை அங்காடி

◆ **பெரம்பலூர் மாவட்டம்**

பெரம்பலூர் நகராட்சி பழைய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள பூமாலை வணிக வளாகத்தில் பெரம்பலூர் மாவட்ட தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில், தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு சுற்றுச்சூழலை பாதிக்காத இயற்கை நேய பட்டாசுகளை விற்பனை செய்யும் அங்காடி அமைக்கப்பட்டிருந்தது. பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்கள் இந்த அங்காடியில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பல்வேறு இயற்கை நேய பட்டாசுகளைப் பார்வையிட்டு, அது குறித்த விபரங்களைக் கேட்டறிந்தார்.

இந்த அங்காடியில் தற்போது குழந்தைகளுக்கான மத்தாப்பு போன்ற சிறிய அளவிலான இயற்கை நேயப் பட்டாசுகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. எதிர்வரும் காலத்தில் அனைத்து வகையான இயற்கை நேயப் பட்டாசுகளும் விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சி

◆ **திருவண்ணாமலை மாவட்டம்**

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் அனைத்து வட்டாரங்களிலும் பணியாற்றும் சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு 13 நாள் பயிற்சியினை 04.11.2019 அன்று திருவண்ணாமலை மாவட்ட மகமை பயிற்சி மையத்தில் திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திருமதி. பெ. சந்திரா அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். இப்பயிற்சியில் முதல் கட்டமாக 45 நபர்கள் கலந்து கொண்டனர்.

தொழிற்திறன் பயிற்சி பெற செல்லும் இளைஞர்களுக்கு வாழ்த்து

◆ நாகப்பட்டினம் மாவட்டம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 19.10.2019 அன்று இளைஞர்களுக்கான தொழிற்திறன் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் தொழிற்திறன் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்ட 110 இளைஞர்களுக்கு தீன்தயாள் உபாதியாய கிராமின் கௌசல்யா யோஜனா திட்டத்தின் கீழ் செயல்படும் 8 பயிற்சி நிறுவனங்களில் தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அவ்வாறு தொழிற்பயிற்சிக்கு செல்லும் இளைஞர்களை நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்தி அனுப்பி வைத்தார். அப்போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் இளைஞர்களிடையே பேசுகையில் 'தொடர்ந்து இப்பயிற்சியை கருத்தூன்றி கற்றுக் கொள்ள வேண்டும் என்றும், பயிற்சி முடிவில் வழங்கப்படும் சான்றிதழ் மிகவும் மதிப்புமிக்கது என்பதால் 100% பயிற்சியை நிறைவு செய்து வேலை வாய்ப்பினை பெற்றிடவும் வாழ்த்துக்கள்' என்று கூறினார்கள். இந்நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனர் திரு. எஸ். பி. பாலமுருகன் மற்றும் மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பணி நியமன ஆணை வழங்குதல்

◆ சேலம் மாவட்டம்

சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 02.11.2019 அன்று வீரபாண்டி வட்டாரத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் வட்டார அளவிலான வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் வீரபாண்டி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. மனோன்மணி அவர்கள் கலந்து கொண்டு வேலைவாய்ப்பு முகாமினை துவக்கி வைத்தார். மேலும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பது குறித்த உறுதிமொழி ஏற்கப்பட்டது.

மேற்படி முகாமில் 380க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர். 30 தனியார் வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்கள் பங்கேற்று தங்களின் நிறுவனத்தில் பணியாற்ற 130 நபர்களை தேர்வு செய்தன. சேலம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. சா. செல்வகுமார் அவர்கள் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

ஊட்டச் சத்து தோட்டம் அமைக்க காய்கறி விதைகள் வழங்குதல்

◆ விருதுநகர் மாவட்டம்

சுய உதவிக் குழு மகளிரின் வாழ்வில் பெரிதும் அக்கறை கொண்டு செயல்பட்டு வரும் நம் தமிழக அரசு, சுய உதவிக் குழு மகளிருடைய ஊட்டச் சத்து குறைபாட்டினைப் போக்கும் வகையில் ஊட்டச்சத்து தரும் காய்கனிகளைக் கொண்ட தோட்டம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்பட்டு வரும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன்படி தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புப்படி, ஊட்டச் சத்துத் தோட்டம் அமைக்கும் வகையில் விருதுநகர் மாவட்டம், நரிக்குடி வட்டாரத்தில் செயல்படும் கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கு ஊட்டச் சத்துத் தோட்டம் அமைப்பதற்கான காய்கறி விதைகளை விருதுநகர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வில் உதவித் திட்ட அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கடலூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சீர்மிகு செயல்பாடுகள்

◆ கடலூர் மாவட்டம்

கிராமப்புற மக்களிடைய நிலவி வரும் ஏழ்மையை போக்கி, அவர்களின் வளமான வாழ்விற்கு வழிகாட்டும் வகையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களை அமைத்து, அவற்றின் உறுப்பினர்களுக்கு தொழில் மற்றும் நிர்வாகப் பயிற்சிகள் அளிப்பது, வேலைவாய்ப்பு பெற்றுத் தருவது, சுய வேலைவாய்ப்புகளை உருவாக்குவது, ஒத்தத் தொழில் குழுக்களை உருவாக்குவது, வங்கிக் கடன் இணைப்புகளை பெற்றுத் தருவது போன்ற ஆக்கப்பூர்வமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகளின் காரணமாக கிராமப்புற பெண்கள் கூட தொழில் முனைவோர்களாக உருமாறி வருகின்றனர்.

தமிழ்நாட்டின் முக்கிய மாவட்டமாக கருதப்படும் கடலூர் பல்வேறு சிறப்புகளைப் பெற்றது. உலகப் புகழ் பெற்ற சிதம்பரம் நடராஜர் கோவில், இராமலிங்க அடிகளார் தோற்றுவித்த வடலூர் சத்திய ஞான தருமசபை, பழுப்பு நிலக்கரி கிடைக்கும் நெய்வேலி, சுனாமித் தாக்குதலையே எதிர்த்து நின்ற அலையாத்திக் காடுகளைக் கொண்ட பிச்சாவரம் போன்ற சிறப்புகளைப் பெற்றுள்ள கடலூர் மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினை செயல்படுத்துவதிலும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கடலூர் மாவட்டத்தில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு தர மதிப்பீடு செய்து, தகுதி அடிப்படையில் வங்கிகளில் இருந்து சுழற்சி முறையில் ரூ. 1 லட்சம் முதல் ரூ. 10 லட்சம் வரையில் பல்வேறு தொழில் நடவடிக்கைகளுக்கு கடன் இணைப்பும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்க நிதியாக ரூ. 1 லட்சமும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 419 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு சமுதாய முதலீட்டு நிதி விடுவிக்கப்பட்டு, அக்கூட்டமைப்புகளில் உறுப்பினராக உள்ள சுய உதவிக் குழுக்கள் தொழில் சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் துவக்கப்பட்டு, அவற்றின் உறுப்பினர்களுக்கு பல்வேறு தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு, பொருளாதார வளர்ச்சிக்கு வழி செய்யப்பட்டுள்ளது.

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ் கடலூர் மாவட்டத்தில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, அதன் மூலம் கிராமப்புறங்களில் வசிக்கும் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பல்வேறு

தனியார் தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது. மேலும் தொழிற்பயிற்சிகளும் வழங்கப்படுகிறது.

மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் தொழில் செய்யும், விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாராத தொழில்களில் ஈடுபடும் மகளிரைக் கொண்டு, தொழில் முனைவோர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு ஊராட்சிக்கு 40 முதல் 50 பெண்களைக் கொண்ட தொழிற்குழு அமைக்கப்பட்டு, அவைகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மேலும் சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கான வாய்ப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

அதேபோல் கடலூர் மாவட்டத்தில் உள்ள கடலூர், சிதம்பரம், நெல்லிக்குப்பம், விருத்தாச்சலம் மற்றும் பண்ருட்டி ஆகிய 5 நகராட்சிகள் மற்றும் 16 பேரூராட்சிகளில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இயக்கத்தின் வழிகாட்டுதலில் நகர்ப்புறங்களில் சுய உதவிக் குழுக்கள் அமைப்பது, தர மதிப்பீடு செய்வது, பயிற்சிகள் வழங்குவது, வங்கிக் கடன் பெற்றுத் தருவது, சுய உதவிக் குழுக்களை தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்வது, தனி நபர்களுக்கு சுய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவது போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வறுமை ஒழிப்புத் திட்டங்களை செயல்படுத்துவதிலும், சுய உதவிக் குழு மகளிரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தமிழக அரசு தீட்டும் திட்டங்களை செயல்படுத்துவதிலும் கடலூர் மாவட்ட மகளிர் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

நிதி உள்ளாக்கம், நிதி கல்வி மற்றும் வங்கி இணைப்பு குறித்த பயிற்சிப் பட்டறை

◆ கிருஷ்ணகிரி மாவட்டம்

கிருஷ்ணகிரி மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், மகளிர் சுய உதவி குழுக்கள் வலிவு பெறவும், வங்கி இணைப்பு பெற உதவிடும் வகையில் ஊத்தங்கரை மற்றும் மத்தூர் ஆகிய ஒன்றியங்களிலுள்ள வங்கியாளர்கள் மற்றும் சமுதய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு ‘நிதி உள்ளாக்கம், நிதி கல்வி மற்றும் வங்கி இணைப்பு குறித்த பயிற்சி பட்டறை 29.10.2019 அன்று நடைபெற்றது. மாவட்ட முதன்மை வங்கி மேலாளர் (LDM) இந்தியன் வங்கி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் உதவி திட்ட அலுவலர்கள், வே. பிரபாகரன், மு. பெருமாள், மாதேஷ்வரன், ஒன்றிய இயக்க மேலாண்மை அலகின் மேலாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

ஊழியர்களுக்கான ஆளுகை குறித்த நோக்குநிலை பயிற்சி

சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில், ‘ஊழியர்களுக்கான ஆளுகை குறித்த நோக்குநிலை பயிற்சி’ 18.10.2019 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு) திருமதி. சரஸ்வதி கணேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூடுதல் இயக்குநர்கள் திரு. பா. செல்வராஜன், திரு. சி. கே. வீரணன், இணை இயக்குநர் திருமதி. செல்வராணி, மாநில திட்ட மேலாளர் திரு. சரவணன், நிதி ஆலோசகர் செல்வி. நிரூபா ராணி, உதவி இயக்குநர் திருமதி. ஏ. கோப்பெருந்தேவி மற்றும் முதுநிலை ஆலோசகர் திரு. கே. எம். திருநாவுக்கரசு ஆகியோர் பயிற்சி குறித்து விளக்கி பேசினர். கடலூர், சேலம், ஈரோடு, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களின் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத்தின் திட்ட இயக்குநர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார திட்ட மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர்களுக்கு ‘ஊழியர்களுக்கான ஆளுகை குறித்த நோக்கு நிலை பயிற்சி’ வழங்கப்பட்டது.

மரம் வளர்ப்போம், நலம் பெறுவோம் என்பது விழிப்புணர்வு வாசகம் மட்டுமல்ல, நாட்டின் இன்றைய அத்தியாவசியத் தேவையுமாகும். காடுகளை அதிக அளவில் அழித்தல், தொழிற்சாலைகள், சாலைகள், சுரங்கங்கள் போன்றவை அமைத்தல் மற்றும் முறையற்ற வேளாண்மை ஆகிய காரணிகளால் விளை நிலங்களும் காடுகளும் குறைந்து விட்டன. மரங்களை வெட்டுவதைத் தடுக்க வேண்டும், குறைந்து வரும் வனவளத்தைக் காக்க வேண்டும் என்ற விழிப்புணர்வினை மக்களின் மனதில் ஏற்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

மரங்களை வெட்டுவதை தடுத்து, மரங்களை வளர்ப்பதில் நாம் கவனம் செலுத்தவில்லை என்றால் இன்னும் பத்து ஆண்டுகளில் பருவ நிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டு வளமான பகுதிகள் கூட பாலைவனமாகிவிடும் அபாய நிலை ஏற்பட்டு விடும். பூமியில் மூன்றில் ஒரு பங்கு காடுகள் இருக்க வேண்டும் என்பது இயற்கையின் விதி. இவ்வாறு இருந்தால் நமக்கு கிடைக்கும் பயன் அதிகம். புவியின் தட்பவெட்பத் தன்மையை நிர்ணயிக்கும் காரணிகளாக காடுகள் உள்ளன. காடுகள் அழிக்கப்படுவதால் கடல் மட்டம் உயர்வு, புவி வெப்பம் அதிகரிப்பு, பருவநிலை மாறி சில பகுதிகளில் அதிக மழை, சில பகுதிகளில் வறட்சி போன்றவை உருவாகின்றன. மரங்கள், பறவைகள் மற்றும் விலங்குகளின் புகலிடமாய் விளங்குகின்றன. மண் அரிப்பை தடுத்தல், நிலத்தடி நீரின் அளவை உயர்த்துதல், ஆறுகளில் வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்துதல், குளிர்விப்பான்களுக்கு ஆகும் செலவைக் குறைத்தல், பல்லுயிர் பெருக்கம், மரக்கட்டைகளின் மதிப்பு, மழை பொழிவு, அதன் வேளாண் பலன்கள் என அளவிட இயலாத செல்வம் மர வளம். புவி வெப்பமாதலுக்கு முதன்மையான காரணம், பசுமை கூட வாயுக்களின் வெளியேற்றம், அவற்றில் முக்கியமாக கார்பன்டைஆக்சைடின் விகிதாச்சார அளவு அதிகரிப்பது. ஒளிர்சேர்க்கை செய்யும் உயிர்களைத் தவிர மற்ற அனைத்தும் கார்பன்டைஆக்சைடை வெளியேற்றுபவையாகவே உள்ளன, அத்தோடு மனிதர்களின் உருவாக்கங்களும் கார்பனை வெளியேற்றுகின்றன. பூமியில் இவை அனைத்திற்கும் எதிராக கார்பன் ஆக்சிஜன் விகிதாச்சாரத்தை சமன் செய்யப் போராடுவது மரங்கள் ஒன்று மட்டுமே!

ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள வளர்ந்த மரங்கள் ஒரு வருடத்தில் எடுத்துக் கொள்ளும்

கார்பனின் அளவு, ஒரு வாகனம் 26000 மைல் பயணிப்பதால் வெளியிடும் கார்பன் அளவிற்கு ஈடானதாகும், அத்தோடு 18 மனிதர்கள் ஒரு வருடம் சுவாசிக்க தேவையான ஆக்சிஜனையும் வெளிவிடுகிறது. மரங்கள் காற்றினை தூய்மை செய்வதுடன், நிழலையும் தருகின்றன. ‘நிழலின் அருமை வெயிலில் தெரியும்’ என்பது பொன்மொழி. வெப்பம் அதிகமாகக் காணப்படக் காரணம் என்ன? நாம் மரங்களை அழித்ததும், அதனால் ஏற்பட்ட நிழலின்மையுமே காரணமாகும். கடலோரப் பகுதிகளில் மரங்கள் வளர்க்கப்படும்போது அலைகளை கட்டுப்படுத்தும் சக்தி மரங்களுக்கு உண்டாகிறது. புவியைக் காத்தால் தான் உயிரினங்களைக் காக்க முடியும். ‘வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்’ என்பது மாறி, ஆளுக்கொரு மரம் வளர்க்க வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது. மரங்கள் இயற்கையின் கொடை. அவற்றை நாம் கண்ணெனக் காக்க வேண்டும். உலக நலனையும், எதிர்காலச் சந்ததிகளின் தேவைகளையும் கவனத்தில் கொண்டு, தொலைநோக்குப் பார்வையுடன் நம் முன்னோர்கள் நட்டு வைத்த மரங்கள் தான் இன்று நம்மையும், நம் பூமியையும் காத்து வருகின்றன. இதைப் போல நாமும் மரங்களை நட்டு நம் சந்ததியினருக்கு நன்மை செய்திட வேண்டும்.

நாம் மரமோ அல்லது செடியோ வளர்க்கலாம். ஒரு கனசதுர அடி அளவு மண் போதுமானது ஒரு பப்பாளி மரம் வளர்க்க. இன்னும் இரண்டு கனஅடி இருந்தால் ஒரு முருங்கை நட்டு விடலாம். இன்னும் இரண்டு கனஅடி இருந்தால் வேம்பு நட்டு விடலாம். மரங்களின் தண்ணீர் தேவைக்கு நாம் பயன்படுத்தும் கழிவு நீரே போதும்.

மரங்கள் நமக்கு பூ, காய், கனி, கீரை போன்ற உணவு வகைகளைத் தருகின்றன. சிறந்த மருந்துகளையும் உருவாக்க உதவுகின்றன. நிறைய மரங்களை வளர்த்து காடுகளை உருவாக்க வேண்டும். மரங்கள் நாட்டின் செல்வங்கள் என்பதை உணர வேண்டும். குழந்தைகளை மரங்களை நேசிக்க கற்றுக் கொடுத்தால் அவை மனிதர்களை நேசிக்கவும் எளிதில் கற்றுக் கொள்ளும். நமக்கு முந்தைய தலைமுறையில் இல்லாத ஒன்றாக நாம் தண்ணீரை காசு கொடுத்து வாங்குகிறோம், எதிர்கால தலைமுறை காற்றுக்கு காசு செலவழிக்க போகும் முன் நாம் விழித்திடவும், செயல்புரியவும் வேண்டும்.

ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையம்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை பார்வையிட மத்திய அரசின் இணைச் செயலாளர் வருகை

தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட மத்திய நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் இணைச்செயலாளர் திரு. சஞ்சய் குமார், இ.ஆ.ப., அவர்கள் 04.11.2019 மற்றும் 05.11.2019 ஆகிய இரண்டு தினங்கள் வருகை புரிந்தார். இவருடன் வருகை தந்த குழுவினர், 04.11.2019 அன்று நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து 05.11.2019 அன்று, சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நகர்ப்புற மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களைப் பார்வையிட்டு, அப்பொருட்கள் குறித்த விபரங்கள், விற்பனை போன்றவற்றை கேட்டறிந்ததுடன் சுய உதவிக் குழுவினரை பாராட்டினர். மேலும் மத்திய நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் இணைச்செயலாளர் அவர்கள் சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்களை இணையம் மூலம் விற்பனை செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விரிவாக ஆய்வு செய்தார். இந்த நிகழ்ச்சியின் போது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள் திரு. பா. செல்வராஜன் அவர்கள், திருமதி. சரஸ்வதி கணேசன் அவர்கள், திரு. சி. கே. வீரணன் அவர்கள், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் திருமதி. பாரிஜாதம் அவர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஆய்வுக்குப் பின்னர் மத்திய நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் இணைச்செயலாளர் அவர்கள் தன்னுடைய உரையில், “தமிழகத்தில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சிறப்பாக செயல்படுகிறது என்றும், குறிப்பாக நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் மற்றும் தெருவோர வியாபாரிகளுக்கான திட்டங்கள் பிற மாநிலங்களைக் காட்டிலும் மிகச்சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது” என்றும் குறிப்பிட்டதுடன், “தமிழ்நாட்டில் அனைத்துத் திட்டத்தின் உட்கூறுகளும் சிறப்பாக செயல்படுத்தப்படுவதால், அகில இந்திய தரமதிப்பீடு பட்டியலில் இந்திய அளவில் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழ்நாடு இடம் பெற வேண்டும்” என்று அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் மாநில அளவிலான வல்லுநர்களுக்கான தூண்டல் பயிற்சி (Induction Training)

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு இயக்கத்தின் ஒரு அங்கமாக விளங்கும் தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் நகர்ப்புறங்களில் உள்ள ஏழை மக்களைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த இயக்கத்தின் செயல்பாடுகள் மற்றும் நோக்கங்கள் குறித்த தூண்டல் பயிற்சி கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்தில் 14.10.2019 முதல் 19.10.2019 வரையிலான 6 நாட்கள் நடைபெற்றது. நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் திருமதி. பாரிஜாதம் அவர்கள் கோயமுத்தூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. செல்வராஜ் அவர்கள் முன்னிலையில் பயிற்சினை துவக்கி வைத்தார்.

பயிற்சியின் நிறைவு நாளன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் பயிற்சியினை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி, திட்டத்தின் சிறப்புக் கூறுகள் குறித்து விளக்கி, திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திட வேண்டும் என குறிப்பிட்டு புதியதாக நியமிக்கப்பட்ட உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் மாநில அளவிலான வல்லுநர்களை வாழ்த்தினார். இப்ப யிற்சியில் தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் மாநில அளவிலாக வல்லுநர்கள் என 35 நபர்கள் கலந்து கொண்டனர்.

திட்டத்தின் முக்கிய கூறுகளான சமுதாய ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன வளர்ச்சி, பகுதி நிலை கூட்டமைப்பு, நகர வாழ்வாதார மையம், சுய வேலைவாய்ப்புத் திட்டம், வங்கி இணைப்பு, வேலை வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு மற்றும் பணியமர்வு, நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரத் திட்டம், நகர்ப்புற வீடற்றவர்களுக்கு வாழ்விடங்கள் ஆகியன குறித்து தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்றுனர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த உதவித் திட்ட அலுவலர் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

மேலும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றின் ஒட்டுமொத்த நிலைத்ததன்மையை அதிகரிப்பதற்காக பின்பற்றிட வேண்டிய வழிமுறைகள் குறித்தும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியின் ஒரு பகுதியாக திருப்பூர், ஈரோடு மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களில் உள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் திட்டம் செயல்படும் விதத்தை நேரில் பார்வையிடும் வகையில் களப்பயணம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் பகுதி அளவிலானகூட்டமைப்பு (ALF) பயிற்சி

நகர்ப்புற பகுதிகளில் செயல்படும், பல்வேறு சமுதாயம் சார்ந்த சுய உதவிக் குழுக்கள் ஒன்றிணைந்து, மகளிர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள் மற்றும் நலிவுற்ற மக்கள் சமூக, கலாச்சார பொருளாதார மேம்பாடு மூலம் சுயசார்பு பெற்று, நீடித்த நிலைத்த தன்மையை அடைந்திட ஏற்படுத்தப்பட்ட ஜனநாயக அமைப்பே பகுதி அளவிலான கூட்டமைப்பாகும்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டு, பகுதி அளவிலானகூட்டமைப்பு உருவாக்கிட தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்முறை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டம் 1975, பிரிவு 27ன் கீழ் நகர்ப்புறங்களில் மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்பு சங்கமாகப் பதிவு செய்யப்படுகிறது. ஒரு பதிவு பெற்ற சங்கத்திற்கு / நிறுவனத்திற்கு உரிய அனைத்து உரிமைகளும், கடமைகளும் பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு உண்டு என வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பகுதி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகள், துணைக்குழு மற்றும் உறுப்பினர்களுக்கு கூட்டமைப்பின் விதிகள், நோக்கங்கள், செயல்பாட்டு முறைகள், நிதி மேலாண்மை மற்றும் புத்தகப் பராமரிப்பு தொடர்பான பயிற்சிகள் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 15 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 201 பகுதி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்களுக்கு உரிய பயிற்றுநர்களைக் கொண்டு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கூட்டமைப்புகளும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சிகளின் பலனாக பகுதி அளவிலான கூட்டமைப்புகள் சிறப்பாக செயல்பட்டு ஏழை மக்களின் சமூக மற்றும் வாழ்வாதாரம் மேம்பாடு அடையும் நோக்குடன் செயல்பட்டு வருகின்றன.

■ விருதுநகர் மாவட்டம்

வறுமையை போக்கிய வாழ்வாதார இயக்கம்

என் பெயர் குருலட்சுமி, நான் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், அத்திக்குளம் செங்குளம் ஊராட்சி, செங்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். என் தந்தை கூலி வேலை செய்து வருகிறார். நான் 12ஆம் வகுப்பு முடித்து வாசுதேவநல்லூரில் உள்ள ஒரு பாலிடெக்னிக்கில் சேர்ந்தேன். 4 மாதங்கள் கல்லூரிக்குச் சென்றேன். கல்விக் கட்டணம் கட்ட முடியாத காரணத்தால் கல்லூரி படிப்பை இடைநிறுத்தம் செய்து விட்டேன். அந்த சமயத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தீன்தயாள் உபாதியாய கிராமின் கௌசல்யா யோஜனா (DDU-GKY) திட்டத்தின் மூலம் வழங்கப்படும் இளைஞர் திறன் வளர்ப்புப் பயிற்சி பற்றி அறிந்தேன். எனக்கும் தொழிற்ப யிற்சி வேண்டி விண்ணப்பித்தேன். தையல் பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்ட எனக்கு சென்னையில் உள்ள ஓரியன் என்ற நிறுவனத்தில் 6 மாதம் தையல் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக்குப் பின் அந்த நிறுவனமே என்னை சென்னை அம்பத்தூரில் செயல்படும் ஜெ. ஜெ. கார்மெண்ட்ஸில் மாதம் ரூ. 10 ஆயிரம் ஊதியத்தில் பணிக்கு அமர்த்தினார்கள். இந்தத் தொகை எனது குடும்பத்தின் பொருளாதாரத் தேவைக்கு மிகவும் உதவிகரமாக இருக்கிறது. எங்கள் வீட்டின் வறுமையை போக்கிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், DDU-GKY திட்டத்திற்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

■ புதுக்கோட்டை மாவட்டம்

முல்லை அரும்பு சுய உதவிக் குழுவின் வெற்றி

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஒன்றியம், கொத்தக்கோட்டை ஊராட்சி, அம்மையன்புரம் கிராமத்தில் முல்லை அரும்பு சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இக்குழுவின் உறுப்பினர்கள் சிறிய அளவில் உணவு காளான் வளர்ப்பு தொழிலை செய்து வருகின்றனர். இக்குழுவினர் விளைவிக்கும் உணவு காளான்களை புதுக்கோட்டை பகுதியில் உள்ள காய்கறி கடைகள் மற்றும் டிபார்ட்மெண்ட் கடைக்காரர்கள் நேரடியாக கொள்முதல் செய்கின்றனர். இதன் மூலம் ஒவ்வொரு உறுப்பினரும் மாதந்தோறும் கணிசமான அளவில் வருவாய் பெற்று வருகின்றனர்.

■ வேலூர் மாவட்டம்

களிமண்ணில் கலைவண்ணம் படைக்கும் சுய உதவிக் குழுவினர்

வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வேலூர் மாநகராட்சி மண்டலம்3ல் சூளைமேடு பகுதியில் செயல்படும் ஸ்ரீமகாதேவி ரேணுகாம்பாள் சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த 12 உறுப்பினர்களும் களிமண்ணில் பல்வேறு பொம்மைகளைத் தயார் செய்து வருகின்றனர்.

இவர்கள் தயாரிக்கும் பல்வேறு பொம்மைகள் விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, கார்த்திகை தீபம் மற்றும் பொங்கல் போன்ற பண்டிகை நாட்களில் அதிக அளவில் விற்பனை ஆகின்றன. அத்தகைய நாட்களில் இவர்கள் சுமார் ஒரு இலட்சம் வரை வருவாய் ஈட்டுகின்றனர். மேலும் இவர்களுடைய தயாரிப்புப் பொருட்கள் வேலூர் மாவட்டம் மட்டுமின்றி, பிற மாவட்டங்களிலும், மாநிலங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. தங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் துணையாக இருக்கும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர் ஸ்ரீ மகாதேவி ரேணுகாம்பாள் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள்.

பெண்களை அதிகம் தாக்கும் ரத்த சோகை நோய்

மனித உடலில் போதுமான அளவு ரத்தம் இருந்தால்தான் உடல் ஆரோக்கியமாக இருக்கும். ‘குருதி ஓட்டம் நின்று விட்டால் உயிரோட்டமும் நின்று விடும்’ என்பார்கள். நம் உடல் இயக்கத்திற்கு உறுதுணையாக இருக்கும் ரத்தம் நாம் உண்ணும் உணவில் இருந்தே உருவாகிறது. ரத்தில் குறைபாடு ஏற்படும்போது ரத்த சோகை உட்பட பல்வேறு நோய்கள் உருவாகின்றன. குறிப்பாக பெண்கள் ரத்த சோகை நோயினால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். ரத்த சோகை நோய் குறித்தும், அதை தவிர்க்கும் வகை குறித்தும் இப்பகுதியில் காணலாம்.

ரத்த சோகை எதனால் வருகிறது?

நம் ரத்தத்தில் இருக்கும் சிவப்பு அணுக்களில் ஏற்படும் குறைபாடுகளையே ரத்தசோகை (Anemia) என்கிறோம். இன்னும் கொஞ்சம் விளக்கமாக சொன்னால், இந்த சிவப்பு அணுக்களில் ஹீமோகுளோபின் என்ற நிறமிகள் இருக்கின்றன. நம் உடலின் செயல்பாட்டுக்குத் தேவையான ஆக்சிஜனை திசுக்களுக்கு எடுத்துச் செல்வது இந்த ஹீமோகுளோபின்கள்தான். சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை குறைந்து, அதனால் ஹீமோகுளோபினின் செயல்பாடும் குறைந்து, அதனால் ஆக்சிஜன் எடுத்துச் செல்லப்படுவதும் தடைபடும் நிலையையே ரத்தசோகை என்கிறோம்.

வழக்கமாக ஹீமோகுளோபின் அளவு ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என மூன்று தரப்புக்கும் சிறிது வித்தியாசப்படும். ஆண்களுக்கு சராசரியாக 14.5 முதல் 15.5 gm/dl, பெண்களுக்கு 13.5 முதல் 14.5 gm/dl இருக்க வேண்டும், குழந்தைகளுக்கு 16 முதல் 17 gm/dl என கொஞ்சம் அதிகமாக இருக்கும். (ஒரு லிட்டர் ரத்தத்தில் 10ல் ஒரு பாகத்தை எடுத்துக் கொண்டு, அதற்குள் எத்தனை கிராம் ஹீமோகுளோபின்கள் இருக்கின்றன என்பதைக் கணக்கிடுவார்கள். அதனால்தான் 10ல் ஒன்று என்ற அர்த்தத்தில் Grams per deci litre என்று கணக்கிடுகிறார்கள்.) இந்த ஹீமோகுளோபின் அளவு குறைவதை வைத்து ரத்த சோகை எந்த நிலையில் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கலாம். ஹீமோகுளோபின் 10 முதல் 11 கிராம் இருந்தால் அது லேசான ரத்த சோகை, 9 முதல் 10 கிராமாக இருந்தால் அது மிதமான ரத்த சோகை, 8 கிராமுக்குக் கீழ் இருந்தால் அது தீவிர ரத்த சோகை என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

கீரை, முட்டை, பால், இறைச்சி, பேரீச்சம்பழம் போன்றவற்றை உணவில் தவறாமல் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

விபத்து, அறுவை சிகிச்சை, புற்றுநோய் போன்றவற்றால் உண்டாகும் ரத்த இழப்புகள், இரும்புச் சத்து, ஃபோலிக் அமிலம், பி12 போன்ற சத்துகள் கிடைக்காமல் போவது, பரம்பரை குறைபாடு, என்சைம்களில் ஏற்படும் கோளாறு, சிவப்பு அணுவின் அளவு குறைவது அல்லது வடிவம் மாறுவது, மலேரியா காய்ச்சல், ரத்தம் தானம் பெறும்போது ரத்த வகை மாறிப்போவது போன்ற காரணங்களால் ரத்த சோகை உருவாகலாம். இரும்புச்சத்து குறைபாடு காரணமாகவே பெரும்பாலானவர்கள் ரத்த சோகைக்கு ஆளாகிறார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று எல்லாத் தரப்பினருக்கும் ரத்த சோகை ஏற்படும் என்றாலும், பெண்கள்தான் இதில் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். பருவம் அடைவது, மாதவிலக்கு, பிரசவம் போன்றவற்றால் பெண்கள் இயல்பாகவே அதிக ரத்த இழப்பை சந்திக்கிறார்கள். தாய்ப்பால் கொடுக்கிற பெண்களுக்கு தேவைக்கேற்ற இரும்புச்சத்து கிடைக்காத போதும் ரத்த சோகை ஏற்படுகிறது. இதனால் குழந்தைக்கும் போதுமான இரும்புச்சத்து கிடைக்காமல் போகும். அதனால், பெண்கள் கவனமாகத் தங்களைப் பார்த்துக்கொள்ள வேண்டும். குடும்பத்தினரும் இந்த விஷயத்தில் பெண் குழந்தைகளின் மேல் கூடுதல் அக்கறை காட்டுவது நல்லது. சோர்வு, தூக்கம் வருவது போன்ற உணர்வு, பசியின்மை, எந்த செயலிலும் ஆர்வத்தோடு ஈடுபட முடியாதது, மூச்சு வாங்குவது, நாக்கு, கண்களின் கீழ் பகுதி, மேலண்ணம் போன்ற இடங்கள் சிவந்த நிறத்தை இழந்து வெளுப்பாக மாறி விடுவது, விரல் நகம் மேடாக இல்லாமல் தட்டையாக காட்சியளிப்பது போன்ற அறிகுறிகள் ரத்தசோகை இருப்பவர்களிடம் வெளிப்படையாகத் தெரியும். ரத்தசோகையின் இந்த அறிகுறிகள் தெரிந்தால் ரத்தப் பரிசோதனை நிலையத்தில் சென்று பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ளலாம். காலையில்தான் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்பதோ, சாப்பிடுவதற்கு முன்புதான் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்பதோ கிடையாது.

எப்படி தவிர்ப்பது?

எல்லாவற்றுக்கும் மேலாக சரிவிகித உணவு சாப்பிடுகிறவர்களுக்கு ரத்த சோகை வருவது இல்லை. கீரை வகைகள், முட்டை, பால், இறைச்சி, பேரீச்சம்பழம் போன்றவற்றை உணவில் தவறாமல் சேர்த்துக் கொள்வதன் மூலம் ரத்தசோகை ஏற்படாமல் தடுக்க முடியும். குறிப்பிட்ட வயதுக்கு மேல் ஜீரண சக்தி குறையும்போது மாத்திரை மற்றும் ஊசி வழியாகவும் அந்த குறைபாட்டை சமன்படுத்த முடியும்.

அன்புள்ள முற்றம் வாசகர்களே

சுய உதவிக் குழுவின் ஊக்குனரான மதி, உறுப்பினர்களான கீதா, பாலா மற்றும் மங்கை ஆகியோரிடையே நடைபெறும் உரையாடல்கள் மற்றும் கேள்வி பதில்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விபரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் முற்றக் கச்சேரி வெளியிடப்படுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

இடம் : ஊக்குநர் மதியின் வீடு

கதை மாந்தர்கள் : ஊக்குநர் மதி, உறுப்பினர்கள் பாலா, கீதா மற்றும் மங்கை

சுய உதவிக் குழுவின் ஊக்குனரான மதி தன் வீட்டு முற்றத்தில் அமர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறார். அப்போது சுய உதவிக் குழுவின் உறுப்பினரான பாலா தன்னுடைய தோட்டத்தில் விளைந்த காய்கறிகளை எடுத்துக் கொண்டு வருகிறார்.

பாலா : மதி அக்கா... மதி அக்கா...

மதி : வா... பாலா...

பாலா : என்னக்கா என்ன எழுதிக்கிட்டு இருக்கீங்க?

மதி : நம்ம குழுவுல இருக்கிறவங்க என்னென்ன பொருள உற்பத்தி செய்யறாங்க என்ற விபரத்தை எழுதிக்கிட்டு இருக்கேன்.

பாலா : இப்ப எதுக்கு இந்த விபரமெல்லாம்?

மதி : எல்லாம் நம்ம நன்மைக்காகத்தான். அதைப் பத்தி விளக்கமா சொல்றேன், கீதாவும் மங்கையும் வரலையா? நீ மட்டும் வந்திருக்க... அது என்ன பையில...

பாலா : நான் வண்டியில வந்ததால சீக்கிரமே வந்துட்டேன். என் வீட்டுல விளைஞ்ச காய்கறிகள்ல கொஞ்சம் உங்களுக்கும் எடுத்திட்டு வந்திருக்கேன். அதோ கீதாவும் மங்கையும் வராங்க...

மதி : வா கீதா... வா மங்கை... எப்ப ஊருல இருந்து வந்த?

மங்கை: நேத்து தான் வந்தேன் அக்கா...

பாலா : மதி அக்கா... நம்ம நன்மைக்காகன்னு ஏதோ சொல்றாங்க மங்கை...

மங்கை: என்ன விசயம் அக்கா?

மதி : நம்ம குழுவுல இருக்கிறவங்க என்னென்ன தொழில் செய்யறாங்கன்னு உங்களுக்குத் தெரியும்தானே?

கீதா : ஆமா, நான் வாழை நார்ல பொருட்கள செய்யறேன். மங்கை சத்து மாவு தயாரிக்கறா, பாலா செயற்கை நகைகளை தயாரிக்கிறா. நம்ம குழுவுல இருக்கிற மத்தவங்களும் ஒவ்வொரு தொழிலை செஞ்சிட்டு வராங்க. இப்ப அதுக்கென்ன?

மதி : நீங்க தயாரிக்கிற பொருட்களை எப்படி விற்பனை செய்யறீங்க? போதுமான அளவு இலாபம் கிடைக்குதா?

பாலா : அக்கம் பக்கத்து வீட்டுக்காரங்க, தெரிஞ்சவங்கன்னு எங்க பொருட்கள வாங்குவாங்க. அதுமட்டுமில்லாம நம்ம கிராமத்துல இருக்கிற கடைங்க, கிராம சந்தை போன்றதுல விற்பனை செய்யறோம். ஏதோ கொஞ்சம் இலாபம் கிடைக்குது. சரி எதுக்கு இப்ப அந்த விவரத்தையெல்லாம் கேட்கறீங்க?

மதி : நாம தயாரிக்கிற பொருட்களுக்கு நல்ல மதிப்பும், நியாயமான விலையும் கிடைக்க நல்ல வாய்ப்பு இருப்பது உங்களுக்கு தெரியுமா?

மங்கை: நமக்கு நல்ல வாய்ப்பா? என்னக்கா அது...

மதி : நமக்கு மட்டுமல்ல. பொருட்களைத் தயாரிச்சு விற்பனை செய்யற அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் இந்த வாய்ப்பு இருக்குது...

பாலா : கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க மதி அக்கா...

மதி : நாம தயாரிக்கிற பொருட்கள விற்பனை செய்ய பாதுகாப்பான இடம், அழகான கடைகள், நாம தங்கறதுக்கு இலவச இட வசதி என அனைத்து வசதியும் செஞ்சு தராங்க...

மங்கை: யாருக்கா செஞ்சு தராங்க?

மதி : அப்படி கேளு... நம்ம தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பாக நடக்குற விற்பனைக் கண்காட்சியில நம்மல போன்ற சுய உதவிக்குழுவினர் தயாரிக்கிற பொருட்கள விற்பனை செய்யலாம்.

கீதா : நானும் கேள்விப்பட்டிருக்கேன் அக்கா... ஆனா முழுசா விபரம் தெரியாது.

பாலா : நீங்கதான் விபரமா சொல்லுங்களேன்.

மதி : நம்ம தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பா சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்துல சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி நடத்துறாங்க. அதுல நாம கலந்துக்கிட்டு நம்ம பொருட்களையும் நியாயமான விலைக்கு விற்கலாம்.

கீதா : அப்படியா...? ரொம்ப நல்லா வாய்ப்பா இருக்குதே...

மதி : ஆமா, நம்மல மாதிரி இருக்கிறவங்க தயாரிக்கிற பொருட்கள அனைத்து தரப்பினரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடனும், நம்ம பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கணும்கறதுக்காகவும் நடத்தப்படும் இந்தக் கண்காட்சிகள்ல நம்ம பொருட்கள அழகா பார்வைக்கு வைக்க தேவையான கடைகள், நாம தங்கும் இடம் எல்லாம இலவசமாத் தறாங்க.

பாலா : ரொம்ப நல்லா இருக்கே. எப்ப இந்தக் கண்காட்சி நடைபெறும்?

மதி : நவராத்திரி, கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் ஆகிய பண்டிகை காலங்களிலும், கோடை விடுமுறைக் காலத்திலும் இந்தக் கண்காட்சி நடக்கும். இதுமட்டுமல்லாம மாசந்தோறும் முதல் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்யிற இயற்கை வேளாண் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியும் நடக்குது. இதுலயும் நாம கலந்துக்கலாம்.

மங்கை: நமக்கு நல்ல வாய்ப்புதான்...

மதி : இந்த கண்காட்சியில நாம நம்ம பொருட்கள நேரடியாகவே வாடிக்கையாளருக்கு விற்கலாம். விற்பனை செய்யற பணத்தைக் கூட பாதுகாப்பா வங்கிக் கணக்குல போட்டு கண்காட்சி முடிவுல நமக்குத் தருவாங்க. அதனால நம்ம பணம் பாதுகாப்பா இருக்கும்.

மங்கை: அடேங்கப்பா... எவ்வளவு நல்லத் திட்டம்.

கீதா : ஆமாம்பா. நான் கூட கேள்விப்பட்டேன். இப்ப நடந்த நவராத்திரி கண்காட்சியில நம்ம மாவட்டத்துல இருந்து கலந்துக்கிட்டவங்ககூட தங்களோட பொருட்கள நல்ல இலாபத்துக்கு வித்தாங்களாம்.

பாலா : அட... எங்க சொந்தக்காரங்க அவர்களோட நிலத்துல விளையிற இயற்கை காய்கறிகள மூணு நாள்ல வித்து நல்ல வருவாய் பெற்றிருக்காங்க.

மதி : இது மட்டுமல்ல... வட்டார, மாவட்ட அளவில் கண்காட்சிகள், அகில இந்திய அளவில் நடக்கிற சாராஸ் கண்காட்சி, கல்லூரி மாணவ மாணவியரிடையே சுய உதவிக் குழுவினரின் பொருட்கள பிரபலப்படுத்தறதுக்காக நடத்துற கல்லூரிச் சந்தை என நமக்காக நிறைய கண்காட்சிகள நடத்த நம்ம தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கீதா : நம்ம மேல அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கு.

பாலா : மதி அக்கா நாம இந்த முறை கண்காட்சி யில நம்ம பொருட்கள விற்பனை செய்யலாமா?

மதி : கண்டிப்பாக நாம இந்தக் கண்காட்சியில கலந்துக்கறோம். இதற்காகத் தான் தமிழ்நாடு மகளிர் திட்டத்தின் சந்தைப்படுத்துதல் பிரிவு, மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் ஆகியவற்றின் அலுவலர்கள்கிட்ட கண்காட்சியில கலந்து கொள்வதற்கான விபரங்களைக் கேட்டிருக்கேன். அது வந்ததும் உங்களை சந்திக்கிறேன்.

மங்கை, பாலா, கீதா முவரும் மதியிடம் விடைபெற்று, தங்களின் வீடுகளுக்குச் சென்றனர்.

(முற்றக் கச்சேரி தொடரும்)



➤ *தருமபுரி மாவட்டம்*

கால்நடை வளர்ப்பு மற்றும் மளிகைக் கடை நடத்தும் சுபம் மகளிர் சுய உதவிக் குழுவினர்

தருமபுரி மாவட்டம், அண்டிஹள்ளி ஊராட்சி, ஒன்னியம்பட்டி கிராமத்தில் 14 உறுப்பினர்களைக் கொண்ட சுபம் மகளிர் சுய உதவிக் குழு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் ஆரம்பத்தில் சிறிய அளவில் வியாபாரம் செய்தும், விவசாயக் கூலி வேலையிலும் ஈடுபட்டும் வந்தனர்.

பின்னர் குழுவாக இணைந்து, சுபம் சுய உதவிக் குழுவை துவக்கினர். வங்கியில் சேமிப்புக் கணக்குத் துவங்கி தவறாமல் சேமித்தும் வந்தனர். தொடர்ந்து அவர்களுக்கு வாழ்வாதார இயக்கம் வாயிலாக பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டது. குழுவின் உறுப்பினர்களும் தங்களின் சேமிப்பு மூலம் கடன் பெற்று தங்களின் பொருளாதாரத்தை வளர்த்து வந்தனர்.

இந்நிலையில் குழுவின் உறுப்பினர்கள் சுயமாக தொழில் செய்ய விரும்பி அதற்கான முதலீட்டிற்காக வங்கிக் கடன் பெற வேண்டி ஊரக வாழ்வாதார இயக்கத்தை அணுகினர். அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் தருமபுரி இந்தியன் வங்கிக் கிளையில் ரூ. ஒரு லட்சம் மானியத்துடன் கூடிய ரூ. மூன்று லட்சம் கடனுதவி வழங்கப்பட்டது. இந்தத் தொகையினை மூலதனமாகக் கொண்டு குழுவின் 6 உறுப்பினர்கள் கறவை மாடுகளை வாங்கி பால் கறந்து, கிருஷ்ணபுரம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் வாயிலான விற்பனை செய்து வருகின்றனர்.

மற்ற உறுப்பினர்கள் கிருஷ்ணாபுரத்தில் சிறிய அளவிலான மளிகைக் கடை ஒன்றினைத் துவங்கி, அதில் அரிசி, பருப்பு, சோப்பு, அழகு சாதனப் பொருட்கள் மற்றும் சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்கள் போன்றவற்றை விற்பனை செய்கின்றனர். அருகில் உள்ள போச்சம்பள்ளி சந்தையில் தங்கள் கடைக்குத் தேவையான அரிசி, பருப்பு போன்ற சமையல் பொருட்களை மொத்தமாக கொள்முதல் செய்வதால் இவர்களுக்கு இலாபம் சற்று அதிகமாக கிடைக்கிறது.

மேற்படி தொழில் நடவடிக்கைகளின் மூலம் சுபம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருகின்றனர். தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய மகளிர் திட்டம், வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றிற்கு சுபம் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

➤ *கன்னியாகுமரி மாவட்டம்*

மங்கையர் டெக்ஸ்டைல்ஸ் திறப்பு விழா

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் ஒன்றியம், காட்டாத்துறை ஊராட்சியில் செயல்பட்டுவரும் காட்டாத்துறை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பல்வேறு வகையிலும் தன்னுடைய சிறப்பான செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெற்று வருகிறது. இக்கூட்டமைப்பில் 98 சுய உதவிக் குழுக்கள் உறுப்பினராக இணைந்து செயல்பட்டு வருகின்றன. இதுவரையிலும் 71 சுய உதவிக் குழுக்களுக்கு காட்டாத்துறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலிருந்து ரூ. 9,85,00,000/- பெருங்கடனாக பெறப்பட்டுள்ளது. இத்தொகையினை கடனாக பெற்ற குழு உறுப்பினர்கள் சணல் பை தயாரித்தல், எம்பிராய்டரிங், தையல், டெக்ஸ்டைல்ஸ், நியாய விலைக் கடை, வாழைநார் கூடை பின்னுதல், கோழி வளர்த்தல், பெட்டிக்கடை போன்ற தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர். சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கான விருது பெற்றுள்ள இக்கூட்டமைப்பின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள `மங்கையர் டெக்ஸ்டைல்ஸ்' என்ற கடையினை 24.10.2019 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வே. பிச்சையா அவர்கள் திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது உதவி திட்ட அலுவலர்கள், கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

➤ *திருநெல்வேலி மாவட்டம்*

ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு விருது

சிறப்பாக செயல்படுத்தப்படும் அரசுத் திட்டங்களுக்காக வழங்கப்படும் 2019-2020ஆம் ஆண்டிற்கான SKOCH GOVERNANCE AWARD மற்றும் SKOCH ORDER OF MERIT ஆகிய விருதுகள் திருநெல்வேலி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு நியூடெல்லி SKOCH குழும நிறுவனம் சார்பில் 25.09.2019 அன்று வழங்கப்பட்டன.

பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக மரம், கற்றாழை, வாழை நார், துணி, சணல் மற்றும் காகிதம் ஆகியவற்றால் பல்வேறு பொருட்களை சுய உதவிக் குழுவினர் மூலம் தயாரித்து எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்பாடுத்தியமைக்காக SKOCH GOVERNANCE AWARD மற்றும், RURBAN திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டம் மானூர் வட்டாரத்தில் ஆயத்த ஆடை தயாரித்தல் மையம், நடமாடும் வாகன உணவகம், மண்பாண்ட பொருட்கள் தயாரித்தல், பேக்கரி உணவுப் பொருட்கள் தயாரித்தல், Hallow Block கற்கள் தயாரித்தல், பால்சார்ந்த உணவுப் பொருட்கள் தயாரித்தல், இசேவை வழங்குதல், சானிட்டரி நாப்கின் தயாரித்தல் போன்ற தொழில்களை ஏற்படுத்தி சுய உதவிக் குழுவினரின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக செயல்பட்டமைக்காக SKOCH ORDER OF MERIT விருதும் திருநெல்வேலி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

➤ *திருச்சிராப்பள்ளி மாவட்டம்*

கற்சிலைகளை செதுக்கும் கலைக்குயில் கூட்டுப் பொறுப்புக் குழு

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியம், அடைக்கம்பட்டி ஊராட்சியில் கோரோட் கலைக்குயில் கூட்டுப் பொறுப்புக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உள்ள 10 ஆண் உறுப்பினர்களும் கற்சிலைகள் செதுக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆரம்பத்தில் இக்குழுவின் உறுப்பினர்கள் போதிய வருவாய் இன்றியும், தொழிலை மேம்படுத்தவும் நிதி வசதி இல்லாமலும் மிகவும் சிரமப்பட்டு வந்தனர். தங்களின் தொழிலை மேம்படுத்தத் தேவையான மூலதனத்திற்காக கடனுதவி கோரி திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர் கலைக்குயில் கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள். அவர்கள் மனுவின் அடிப்படையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி அடைக்கம்பட்டி கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் கடன் வழங்கப்பட்டது. கடனாகப் பெற்றத் தொகையைக் கொண்டு, தேவையான மூலப் பொருட்களை வாங்கி, கற்சிலை செய்யும் தொழிலை மேம்படுத்தியதுடன், தயாரித்த கற்சிலைகள் விற்பனை செய்திடவும் ஆரம்பித்தனர். தற்போது கணிசமான அளவில் வருவாய் பெற்று பொருளாதார வளர்ச்சி பெற்று வரும் கலைக்குயில் கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கு வழிகாட்டிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றியை மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கின்றனர்.

➤ *இராமநாதபுரம் மாவட்டம்*

வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி

இராமநாதபுரம் மாவட்டம், ஆர். எஸ். மங்களம் ஒன்றியம், கல்லிக்குடி கிராமத்தில் வசித்து வரும் திருமதி. ஹேமா (க/பெ. இளங்கோவன்) ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் தனது வாழ்வு வளம் பெற்றதை குறித்து கூறும்போது `எங்கள் பகுதியில் ஸ்ரீனிவாச பெருமாள் மகளிர் சுய உதவிக் குழு 15 பெண்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் நானும் உறுப்பினராக உள்ளேன். என் கணவர் சலவைத் தொழில் செய்து வருகிறார். எனது குடும்பம் மிகவும் ஏழைக் குடும்பமாகும். எனது கணவரின் வருவாய் போதிய அளவில் இல்லாததால் எனது குடும்பத்தை நடத்துவது மிகவும் சிரமமாக இருந்தது. இந்நிலையில் எங்கள் பகுதியில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் நான் தனிநபர் கடனாக ரூ. 10,000/-ம் பெற்று, அதைக் கொண்டு இஸ்திரி பெட்டி ஒன்றை வாங்கி துணிகளை சலவை செய்யும் தொழிலை செய்யத் தொடங்கினேன். இதன் மூலம் எனக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 400/-வரை வருவாய் கிடைத்து வருகிறது. அதன் மூலம் எனது குடும்பத்தின் வறுமையும் நீங்கி வருகிறது. எனக்கு தினசரி வருவாய் பெற்று தந்து, எனது குடும்பத்தின் வறுமையைப் போக்கிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு சக்கிமங்கலம் ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் செயலாளரான திருமதி. செல்வி செயல்பட்டு வருகிறார். இவர் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் இணைந்து குப்பையில் இருந்து மண்புழு உரம் தயாரிப்பது குறித்த பயிற்சியைப் பெற்றுள்ளார். தனிநபர் இல்லக் கழிப்பறை குறித்த விழிப்புணர்வினை தனது ஊராட்சிக்குள் நடைமுறைபடுத்தி மக்களை தனிநபர் இல்லக் கழிப்பறைகளை கட்ட வைத்து திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற ஊராட்சியாக மாற்றினார். மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தை திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற ஒன்றியமாக மாற்றுவதற்கு திறம்பட செயல்பட்டார். கழிப்பறை பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார். பள்ளிகளில் குழந்தைகளுக்கு, கழிப்பறையை பயன்படுத்திய பிறகு கைகளை கழுவ வேண்டும் என்று விழிப்புணர்வு கொடுக்கும் பணியையும் செய்து வருகிறார். மேலும் உதவி ஒருங்கிணைப்பாளர், IHHL ஊக்குநர் போன்ற பொறுப்புகளில் சிறப்பாக செயல்பட்டதற்கான ODF விருதுகள், வட்டார மற்றும் மாவட்ட அளவிலும் விருதுகள் பெற்றுள்ளார். மக்களிடையே சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஊட்டுவதற்காக தொடர்ந்து ஊக்கத்துடன் செயல்பட்டு வரும் திருமதி செல்விக்கு முற்றத்தின் வாழ்த்துகள்.

➤ *சேலம் மாவட்டம்*

வாழ்வாதாரம் தந்த வளம்

என் பெயர் பச்சியம்மாள், நான் சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி ஒன்றியம், தாசநாய்க்கன்பட்டி ஊராட்சி, சின்னபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். என் கணவர் இறந்து நான்கு வருடமான நிலையில் நான் கூலி வேலைக்கு சென்று அதில் வரும் வருமானத்தில் உணவு மற்றும் மருத்துவ செலவிற்கு பயன்படுத்தி சிரமப்பட்டு வந்தேன். இந்நிலையில் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் நலிவுற்றோர் தனிநபர் கடன் ரூ. 5000/ பெற்று சிறிய அளவில் பலகாரக் கடை ஒன்றை துவக்கி, சுத்தமான முறையில் தூய்மையான பொருட்களைக் கொண்டு வடை, போண்டா, பஜ்ஜி, முறுக்கு போன்ற தின்பண்டங்களை தயாரித்து விற்று வருகிறேன். இதன் மூலம் மாதந்தோறும் கணிசமான வருவாய் கிடைக்கிறது. இந்தத் தொகை எனது குடும்ப செலவுக்கு போதுமானதாக உள்ளது. நான் வருமானம் ஈட்டுவதற்கு உறுதுணையாக இருந்த கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

➤ புதுக்கோட்டை மாவட்டம்

மாற்றுத் திறனாளியின் மகிழ்ச்சி

புதுக்கோட்டை மாவட்டம், வண்ணாரப்பட்டி ஊராட்சியில் வசித்து வரும் திரு. ராஜேந்திரன் மாற்றுத்திறனாளி என்பதால், எந்த வேலைக்கும் செல்ல முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தார். அச்சமயத்தில் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் குறித்தும், அக்குழுக்களின் மூலம் செயல்படுத்தும் தொழில் நடவடிக்கைகள் மூலம் வருவாய் ஏற்படுத்தலாம் என்ற விபரத்தினையும் குழுக்களின் மூலம் அறிந்து கொண்டார்.

அதன் அடிப்படையில் மாற்றுத்திறனாளி சுய உதவிக் குழுவில் இணைந்து, அதன்மூலம் வாழ்வாதார வளர்ச்சி பெறலாம் என்று நினைத்த திரு. ராஜேந்திரன் அப்பகுதியில் உள்ள 8 மாற்றுத் திறனாளிகளை இணைத்து 'முல்லை' என்ற பெயரில் மாற்றுத்திறனாளி சுய உதவிக் குழுவினைத் துவக்கினார்.

பின்னர் இவருக்கு தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் தனிநபர் கடன் ரூ. 5,000/- மற்றும் ஆதார நிதி ரூ. 15,000/- வழங்கப்பட்டது. இத்தொகையைக் கொண்டு ராஜேந்திரன் தனது பகுதியில் டீ கடை ஒன்றைத் துவக்கி, அதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ. 200/- வரை வருமானம் பெறுகிறார். தற்போது தனது குடும்பம் வறுமையின் பிடியில் இருந்து விடுபட்டுள்ளது என்றும், மாற்றுத்திறனாளியான தனக்கு வளமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

கவிதை

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

ஊரகப் புத்தாக்கத் திட்டம் – இது
ஊரை உயர்த்திடும் திட்டம்!
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்
இது ஊரை உயர்த்திடும் திட்டம்!!

சீர்மிகு தொழில்களை ஊரெங்கும் பெருக்கி
செழிப்பை உருவாக்கும் திட்டம்! – பெரும்
செல்வத்தை உருவாக்கும் திட்டம்!!

தமிழக அரசின் தலைமையிலே
உலக வங்கியின் உதவியுடன்
அமுதம் போன்ற நன்மைகளை
அள்ளித் தருகின்ற திட்டம்! – (ஊரக)

குறுந்தொழில், சிறுதொழில் வளர்ந்திடவே – தொழில்
முனைவோர் யாவரும் மகிழ்ந்திடவே
பலவிதப் பயிற்சி; தொழில்களில் எழுச்சி
எல்லாம் தந்திடும் திட்டம்! – (ஊரக)

வேளாண் பொருட்களைத் தரம் பிரித்து
மதிப்புக் கூட்டும் வழியறிந்து
மேலாண் செய்யும் முறைகளையெல்லாம்
கற்றுத் தருகின்ற திட்டம்! – (ஊரக)

பலகோடி துளிகள் ஒரு நதியில்
பலநூறு கனிகள் ஒரு மரத்தில்
பல பல விதைகள் ஒரு பழத்தில்
பல்வேறு தொழில்கள் நம் திட்டத்தில் – (ஊரக)

முன்னேற விரும்பும் அனைவருக்கும்
முனைப்புடன் தொழில் செய்ய வருபவர்க்கும்
பொன்னான வாய்ப்பினைத் தரும் திட்டம்!
புதுவாழ்வையும் வளத்தையும் தரும் திட்டம்!! – (ஊரக)

– ஜா. சம்பத்
கூடுதல் முதன்மை செயல் அலுவலர்
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

மகளிரின் பொருளாதார வளர்ச்சியில்

அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்கும் திட்டம்

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி உள்ளார். அத்திட்டங்களில் ஒன்றான பணிபுரியும் மகளிர் தங்களின் பணியிடங்களுக்குச் சிரமமின்றி சென்று வர ஏதுவாக `அம்மா இருசக்கர வாகன மானிய திட்டமும்' ஒன்றாகும். இந்தியாவிலேயே நம் மாநிலத்தில் மட்டுமே செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் இதுவரை பல்லாயிரக்கணக்கான பெண்கள் மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களைப் பெற்று பயனடைந்துள்ளனர். பெண்களின் வளர்ச்சிக்கு திருப்புமுனையாக உள்ள இத்திட்டத்தினால் பயனடைந்துள்ள பெண்களின் மகிழ்ச்சியை நாமும் பகிர்ந்து கொள்வோம் வாருங்கள்.

விழுப்புரம் மாவட்டம்

என் பெயர் சத்தியா, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் நகராட்சி, 6வது வார்டு, காலிமான் கொல்லை தெருவில் வசித்து வரும் நான் எங்கள் பகுதியில் மகாலட்சுமி என்ற பெயரில் மகளிர் சுய உதவி குழுவினை ஆரம்பித்துள்ளேன். திண்டிவனம் 1வது வார்டு சந்தைமேட்டில் இயக்கிவரும் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். எனது அலுவலகம் என் வீட்டில் இருந்து சற்று தொலைவில் உள்ளதால், தினமும் 45 நிமிடத்திற்கு முன்பே வேலைக்கு அவசரமாக கிளம்பி செல்வேன். மாலையில் தாமதமாக வீட்டிற்கு வருவேன். இதனால் எனது வீட்டு வேலைகளை சரிவர செய்ய முடியாமல் போனது. சொந்தமாக இருசக்கர வாகனம் வாங்க போதிய வசதியில்லாமல் சிரமப்பட்டு வந்தேன், இந்நிலையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் `மானிய விலையிலான அம்மா இரு சக்கர வாகன திட்டத்தின்' மூலம் எனக்கு இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. தற்போது நான் எனது வீட்டு வேலைகளை முடித்து விட்டு அம்மா இருசக்கர வாகனத்தில் குறிப்பிட்ட நேரத்தில் வேலைக்குச் செல்கிறேன். மாலை நேரத்தில் சீக்கிரமாக வீட்டிற்கு வந்து முறுக்கு போன்ற தின்பண்டங்களை தயாரித்து கடைகளுக்கு கொடுத்து அதன் மூலம் வருமானம் பெற்று வருகிறேன். என்போன்ற உழைக்கும் மகளிர்களுக்கு இத்திட்டம் பயனுள்ளதாக உள்ளது. இத்திட்டத்தை அறிமுகப்படுத்திய தமிழக அரசிற்கும், மகளிர் திட்டத்திற்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகங்கை மாவட்டம்

எனது பெயர் கலைச்செல்வி, க/பெ. பாலமுருகன். நான் சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை ஊராட்சி, எழுவன்கோட்டை கிராமத்தில் வசித்து வருகின்றேன். என் கணவர் சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டு கண்பார்வையை இழந்து விட்டார். இந்நிலையில், ஆறாவயலில் உள்ள காடேரி அம்மன் மில்லில் பணிபுரிந்து வருகின்றேன். என் கணவருக்கு உடல்நிலை சரியில்லாத நிலையில் வீட்டு வேலைகளை செய்து விட்டு, எங்கள் கிராமத்தில் இருந்து நடந்து சென்று பேருந்தை பிடித்து சரியான நேரத்தில் வேலைக்கு செல்ல மிகவும் சிரமப்பட்டேன். சொந்தமாக இருசக்கர வாகனம் வாங்கவும் என்னிடம் வசதியில்லை. இந்நிலையில் மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் மூலம் வாகனம் வாங்க விண்ணப்பம் கொடுத்தேன். எனக்கு வாகனம் வாங்க உத்தரவு கிடைத்தது. வங்கிக்கடன் மூலம் வாகனம் வாங்கினேன். அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் மூலம் ரூ. 25,000/- மானியம் பெற்றேன்.

அம்மா இருசக்கர வாகனத்திட்டம் மூலம் பெற்ற இந்த வாகனத்தால் நான் மிகவும் பயனடைந்து வருகிறேன். இப்பொழுது சரியான நேரத்தில் வேலைக்கு சென்று வருகிறேன். எனக்கு அம்மா இருசக்கர வாகனம் கிடைக்க உதவியாக இருந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டம்

என் பெயர் மனிஷா, நான் பெரம்பலூர் மாவட்டம், எளம்பலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். திருநங்கையான நான் தினமும் எனது பணிக்காக அதிக தொலைவு செல்ல வேண்டியிருந்தது. சரியான நேரத்தில் பேருந்து கிடைக்காததால் நான் மிகுந்த இன்னலுக்கு ஆளானேன். குறிப்பிட்ட நேரத்தில் பணிக்கு செல்ல முடியவில்லை. அப்போது தமிழக அரசின் மூலம் மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. தகுதியின் அடிப்படையில் எனக்கு இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. எனது வாழ்வை மேம்படுத்த ஒரு வாய்ப்பாக இந்தத் திட்டத்தைக் கருதினேன். தற்போது நான் குறிப்பிட்ட நேரத்தில் எனது இருசக்கர வாகனம் மூலம் வேலைக்கு செல்ல முடிகிறது. நான் அடைந்துள்ள மகிழ்ச்சியை சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை. என்னாலும் என் குடும்பத்தை காப்பற்ற முடியும் என்று எனக்கு ஒரு தன்னம்பிக்கையை கொடுத்து, என் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்படுத்தி தந்த தமிழ்நாடு அரசுக்கும், மகளிர் திட்டத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் திட்டத்திற்கு நன்றி

தூத்துக்குடி மாவட்டம்

தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் வட்டாரம், அத்திக்குளம் கிராமத்தின் மேலத் தெருவில் வசித்து வரும் என் பெயர் கனகலெட்சுமி, நான் ஒரு மாற்றுத் திறனாளி. நான் தினந்தோறும் 8 கி.மீ தூரம் பேருந்தில் சென்று வேலை பார்த்து வந்தேன். குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே பேருந்துகள் இயங்கி வந்ததாலும் மற்றும் காலை வேளையில் கூட்டம் அதிகமாக இருப்பதால் மாற்று திறனாளியான என்னால் சரியான நேரத்தில் நான் வேலை செய்யும் நிறுவனத்திற்கு செல்வது கடினமாக இருந்தது.

இந்நிலையில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மகளிர் திட்டத்தின் மூலம் 20 மாற்றுத் திறனாளிகளுக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. அதில் நானும் ஒரு பயனாளியாக தேர்வு செய்யப்பட்டு, எனக்கும் அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. தற்போது இருசக்கர வாகனம் வாங்கியதற்கு பின்பு என்னால் நான் பணிபுரியும் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே சென்று பணிபுரிய எளிதாக உள்ளது. மேலும் மாற்று திறனாளியான என்னால் அம்மா இருசக்கர வாகனம் வாங்கிய பின்னர் யார் தயவும் இன்றி எங்கும் செல்ல மிகவும் வசதியாக உள்ளது. என் போன்ற மாற்றுத் திறனாளி மகளிர்களுக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டம் பெரிதும் உதவியாக உள்ளது. எனது சிரமத்தைப் போக்கிய மகளிர் திட்டத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

எனது பெயர் தனக்கொடி. திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், புத்தனாம்பட்டி ஊராட்சியில் வசித்து வருகிறேன். மிகவும் ஏழை குடும்பத்தை சேர்ந்த நான், பெரமங்கலத்தில் உள்ள நிறுவனம் ஒன்றில் பணி புரிகிறேன். நாள் பணிபுரியும் இடம் எனது வீட்டில் இருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது. கணவரை இழந்த நிலையில் நலிவுற்றோராகிய நான் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புவது, சரியான நேரத்திற்கு பணிக்கு செல்வது ஆகியவற்றில் மிகவும் சிரமப்பட்டேன். இப்படிபட்ட சூழ்நிலையில் தான் பணிபுரியும் பெண்களுக்கு 50 சதவிகித மானிய விலையில் அம்மா இருச்சக்கர வாகனம் வழங்கும் திட்டம் குறித்த விபரம் அறிந்து, முசிறி ஒன்றிய அலுவலகத்தில் விண்ணப்பித்தேன்.

எனது விண்ணப்பம் கள ஆய்வுக்குப்பின் தேர்வு செய்யப்பட்டு, எனக்கு அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்கி ஆணை வழங்கப்பட்டது. எனக்கு விருப்பமான இருசக்கர வாகனத்தை வாங்கினேன். தற்போது சரியான நேரத்தில் பணிக்கு செல்கிறேன். பாதுகாப்பாகவும் வீடு திரும்புகிறேன். என்னைப் போன்ற ஏழை எளிய பெண்களுக்கு மானியம் வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், அவர்களுக்கும், மகளிர் திட்டத்திற்கும் என் நன்றியை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

பனிக்காலத்தில் உடல் நலப் பராமரிப்பு

பனிக்காலம் தொடங்கியதுமே குழந்தைகளைப் பல நோய்கள் தொற்றிக்கொள்ளும். இப்போது இருக்கும் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி மிகமிக குறைவாக இருப்பது ஒரு காரணமென்றால் மற்றொரு புறம் சுற்றுப்புறச்சூழலால் புதிதுபுதுதாக கிளம்பும் கிருமிகள். இவற்றிடமிருந்து குழந்தைகளை பாதுகாக்க நம் வீட்டை கிருமிகள் அண்டாமல் சுத்தமாக வைத்திருப்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் குழந்தைகளின் உணவு முறைகளை கையாள்வதும்.

பனிக்காலத்தில் ஒரு சில உணவுகளை கொடுக்கவேண்டும், சில உணவுகளை தவிர்க்கவேண்டும் என பெற்றோர்கள் நினைக்கிறார்கள். அது முற்றிலும் தவறான கருத்து. நம் ஊர் குளிரோ, மழையோ, பனியோ எதுவும் நம் செரிமானத்தை பாதிக்காது. பனிக்காலத்தில் தண்ணீர் குடிப்பது குறைவதால் அதிகம் பசிக்கும். இக்காரணத்தினால் அவர்களுக்கு சத்து நிறைந்த உணவுகளை அதிகம் கொடுக்கவேண்டும். ஆனால் பல அம்மாக்கள் செய்யும் தவறு. தயிர், ஆரஞ்சு, வாழைப்பழம் சாப்பிடுவதால் சளி பிடிக்கும் என குழந்தைகளுக்கு கொடுப்பதில்லை. பனிக்காலத்தில் தொற்றுக்கிருமிகளால் சளி பிடிக்கும். குழந்தைகளின் நோய் எதிர்ப்பு திறனை பொறுத்து சளி பிடிக்கும் இது ஒரு இயல்பான செயல். இதற்கும் உணவு முறைகளுக்கும் சம்பந்தமில்லை.

வைட்டமின் சி நிறைந்த காய்கறிகள், பழங்கள், மற்றும் மோர் போன்றவற்றை அதிகம் கொடுத்தால்தான் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி கூடும். டெங்கு, ஸ்வைன் ஃப்ளு போன்ற நோய்களில் இருந்து குழந்தைகளைக் காப்பாற்ற உதவும். வைட்டமின் சி நிறைந்த உணவுகள் எலுமிச்சை, ஆரஞ்சு, உருளைக்கிழங்கு, தக்காளி, முட்டைக்கோஸ், மிளகு, கீரை வகைகள் குழந்தைகளுக்கு வழங்கலாம்.

பனிக்காலத்தில் இஞ்சி, லவங்கம், ஏலக்காய், கிராம்பு, மிளகு, மஞ்சள் போன்ற மசாலாப் பொருள்களை போதிய அளவில் உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. இது குளிர்காலத்தில் உண்ணும் உணவினை எளிதில் செரிக்க உதவும். முளைகட்டிய உணவு வகைகளும், முள்ளங்கி, வெந்தயம் போன்றவையும் பனிகாலத்துக்கு பயனளிக்கும் உணவுவகைகள்தாம்.

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் அழைப்பு மையம்

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டம் (DDU-GKY) கிராமப்புற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புடன் கூடிய ஒரு திறன் வளர்ப்பு பயிற்சித் திட்டம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், உரிய தகவல்கள் அளிக்கவும் வசதியாக, சிறப்பு அழைப்பு மையம் சென்னையில் கடந்த பிப்ரவரி 2019ல் துவக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

(DDU-GKY) திட்டம் குறித்த தகவல்கள் பெற விரும்புவோர் 044 - 3047 8047 என்ற தொலைபேசி எண்ணிற்கு அழைத்தால் திட்டம் குறித்த தகவல்களைப் பெறலாம்.

இவ் அழைப்பு மையத்தில், திட்டத்தின் மூலம் வழங்கப்படும் திறன் வளர்ப்புப் பயிற்சிகளுக்கான பயிற்சிக் காலம், தகுதி, பயிற்சி மையங்கள், வேலை வாய்ப்பு போன்றவை தொடர்பான சந்தேகங்களுக்கு உரிய விபரங்கள் வழங்கப்படும்.

இந்த அழைப்பு மையம்
காலை 10.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும் செயல்படும்.

சென்னை மாவட்டம், AIR LAND திட்டப் பகுதியில் மறு குடியமர்த்தப்பட்ட குடியிருப்புவாசிகளை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இணைக்கும் திட்ட துவக்க விழா

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பாக சென்னை மாவட்டம், AIR LAND திட்டப் பகுதியில் மறு குடியமர்த்தப்பட்ட அனைத்து குடியிருப்புவாசிகளையும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இணைக்கும் முன்னோடி திட்ட துவக்க விழா 05.11.2019 அன்று AIR LAND திட்டப் பகுதியில் அமைந்துள்ள சமுதாயக் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் தொடக்கத்தில் கலை நிகழ்ச்சியின் மூலம் AIR LAND திட்டப் பகுதியில் அடிப்படை புள்ளி விபரக் கணக்கெடுப்பு பணி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஹெய்சன் கன்சல்டன்ஸி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர். உமா ரவிக்குமார், ஆலோசகர் திரு. ரகுபதி ஆகியோர் குடியிருப்புவாசிகளை அணுகி அடிப்படை புள்ளி விபரங்கள் குறித்த தகவல்கள் சேகரிக்கும் வழிமுறைகள், சேகரித்த தகவல்களை பதிவு செய்யும் முறை மற்றும் அறிக்கை வழங்கும் முறை ஆகியவை குறித்து வேலூர் மாவட்ட மக்கள் கற்றல் மையத்தினைச் சார்ந்த சமுதாய வளப் பயிற்றுநர்களுக்கு தெளிவாக விளக்கினர்.

இவ்விழாவில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் முதன்மை சமுதாய வளர்ச்சி அலுவலர் திரு. நிர்மல், AIR LAND திட்டப் பகுதி செயற்பொறியாளர், சென்னை மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் உதவித் திட்ட அலுவலர்

திரு. அருள்ஜோதி, சியாப் தொண்டு நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. சித்ரா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. சொ. ஸ்ரீனிவாசன், AIR LAND திட்டப் பகுதியில் மறு குடியமர்த்தப்பட்ட அனைத்து குடியிருப்புவாசிகளையும், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இணைப்பதற்கான நோக்கம், செயல்படுத்தப்பட வேண்டிய செயல்பாடுகளான அடிப்படை புள்ளிவிபரக் கணக்கெடுப்புப் பணி மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடச் செய்யும் வழிமுறைகள் குறித்து விளக்கினார்.

இவ்விழாவில் AIR LAND திட்டப் பகுதிக்குட்பட்ட சமுதாயம் சார்ந்த அமைப்புகளான சுய உதவிக் குழுக்களின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள், AIR LAND திட்டப் பகுதி குடியிருப்புவாசிகள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

சென்னை மாவட்டம், AIR LAND திட்டப் பகுதியில் அடிப்படை புள்ளி விபரக் கணக்கெடுப்புப் பணி

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஆகியவற்றின் சார்பாக, சென்னை மாவட்டம், AIR LAND திட்டப் பகுதியில் 05.11.2019 முதல் 20.11.2019 வரை 'அடிப்படை புள்ளிவிபரக் கணக்கெடுப்புப் பணி' நடைபெற்றது. இந்த அடிப்படை புள்ளி விபரக் கணக்கெடுப்புப் பணியானது வேலூர் மாவட்ட மக்கள் கற்றல் மையத்தினைச் சேர்ந்த 20 சமுதாய வளப் பயிற்றுனர்களை கொண்டு நடைபெற்றது. அடிப்படை புள்ளிவிபரக் கணக்கெடுப்பு குறித்த விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் AIR LAND திட்டப் பகுதியின் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டு, அதைத் தொடர்ந்து திட்டப் பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் நேரடியாகச் சென்று அங்கு வசிப்பவர்களை சந்தித்து மேற்கொள்ளப்பட்டது. இப்பணியானது தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையத்தின் வழிகாட்டுதலுடன் நடைபெற்றது.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (69,600 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

21-ம் ஆண்டில் வெற்றிநடை போடும்

முற்றம் இதழ்

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!

முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!

முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு	ரூ. 180
இரண்டு ஆண்டு	ரூ. 360
மூன்று ஆண்டு	ரூ. 540

விளம்பரக் கட்டணம்

அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம்.
சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும். பரிசும் வழங்கப்படும்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
மேலாளர், முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 3வது மாடி,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 1st Week of the every month

Goverment Of India

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ்

கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம்

100%

வேலைவாய்ப்புக்கு

044-3047 8047

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

DEEN DHAYAL UPADHYAYA GRAMEEN KAUSHALYA YOJANA (DDU-GKY)

TAMIL NADU STATE RURAL LIVELIHOODS MISSION,
Tamil Nadu Corporation for Development of Women,
Mother Theresa Womens Complex - 3rd floor, Valluvar Kottam High Road,
Nungambakkam, Chennai - 600 034. Phone : 91-44-2817 3415
E-mail : ddugkytn2016«gmail.com / cooddugkytn«gmail.com